உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

நாற்பத்தேழாந்தொகுதி.

Volume 47.

விக்ருதி—கரஹல

1950–1951

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

—

கடவுள் துணை.

# செந்தமிழ்.

## சஎ-ஆம் தொகுதியின் உள்ளுறை.


| கட்டுரையின் பெயர். | எழுதியவர் பெயர். | கட்டுரை தொடங்கும் பக்கம். |
|---|---|---|
| அன்பு:— | திரு. N. R. இருஷ்ணசுவாமிஐயங்காரவர்கள் B.A., B.L. | கOரு |
| இயவர் என்போர் யாவர்:— | திரு. பண்டித, S. அருளம்பலம் அவர்கள் | எஉ |
| உவமையும் தொனியும்:— | திரு. வித்வான் R. நாராயணசுவாமி அவர்கள் | கஉஅ |
| கம்பர்கவிகளில் அருந் சொற் பிரயோகம்:— | திரு. பண்டித, ஆ. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள் | கசுரு |
| களவழியாராய்ச்சி:— | திரு. பண்டித, இராமசுப்பிரமணிய நாவலரவர்கள் | கூரு |
| சிலப்பதிகாரப்பதிகம்:— | திரு. T. N. அப்பணையங்காரவர்கள் | கசுரு |
| தமிழ்நாட்டு மூவேந்தர்:— | திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் B.A., B.L. | ருஎ |
| திருவள்ளுவர்கூறும் அரசியல்:— | ஷை | அக |
| திருவள்ளுவரின் தனிச்சிறப்பு:— | ஷை | உரு |
| திருவேங்கையுலா:— | திரு: சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள் | சஎ |

திருவெதிர்கோள்பாடிச் சிவன்கோயிற்கல்வெட்டுக்கள்:- } திரு. வை. சுந்தரேச வாண்டையாரவர்கள் ௪௯

நாஞ்சில்வேள் அல்லது வள்ளுவன்:— } திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் ௧

நாலடியார் இருவருரைத் திருத்தம்:— } திரு. சத்தியவாகீசுவரைய ரவர்கள் ௯, ௪௧, ௬௭, ௧௪௧

பிழையும் திருத்தமும்:— ஷை ௪௬

பீஷ்மர்:—திரு. A. V. கோபாலாசாரியரவர்கள் B.A., B.L. ௩௩

மதிப்புரை:—பத்திராசிரியர் ௨௧, ௩0, ௭௯, ௧௩௮

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகபரமாசாரிய சுவாமிகளுக்கு மதுரைத்தமிழ்ச் சங்கத்தார் படித்தளித்த வாழ்த்துப்பத்திரம்:- } திரு. T. K. இராமாநுஜையங் காரவர்கள் ௧௭

---

## அநுபந்தம்.

### நூல்.

[முற்றுப்பெற்றது]

திருப்புல்லாணிநொண்டிநாடகம் குறிப்புரையுடன்:— } பத்திராசியர் பகுதி ௬-௭, ௮-௯, ௧0-௧௨ [பக் 1—54]

---

[முற்றுப்பெறாதது]

திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்):— } ஷை பகுதி ௧, ௨-௩, ௪-௫, [பக் 1—56]

---

# செந்தமிழ் உஎ-ஆம் தொகுதிக்குப் பொருளுரைவழங்கியோர்பெயரும் பொருளுரைகளின்பெயரும் பக்கமும்


திரு. T. N. அப்பணையங்காரவர்கள், மதுரை.

சிலப்பதிகாரப்பதிகம் கசரு

திரு. பண்டித S. அருளம்பலம் அவர்கள், காலி.

இயவர் என்போர் யாவர் எஉ

திரு. பண்டித இராமசுப்பிரமணியநாவலரவர்கள், தக்கலை.

களவழியாராய்ச்சி கூரு

திரு. T. K. இராமாநுஜையங்கார், பத்திராசிரியர்.

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகளுக்கு மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் படித்தளித்த வாழ்த்துப்பத்திரம் கஎ

திரு. N. K. கிருஷ்ணசுவாமி ஐயங்காரவர்கள், B.A. B.L., மதுரை.

அன்பு க0ரு

திரு. A. V. கோபாலாசாரியரவர்கள், B.A. B.L., திரிசிரபுரம்.

பீஷ்மர் ருரு

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், திருவனந்தபுரம்.

நாலடியார் இருவருரைத் திருத்தம் கூ, சக, கூஎ, கசக

பிழையும் திருத்தமும் சக

திரு. பண்டித, ஆ. சிவசுப்பிரமணிய ஐயரவர்கள், மதுரை.

கம்பர்கவிகளில் அருஞ்சொற் பிரயோகம் கசுரு

திரு. வை. சுந்தரேசவாண்டையாரவர்கள், திருவையாறு.

திருவெதிர்கொள்பாடிச் சிவன்கோயிற் கல்வெட்டுக்கள் சுகூ

திரு. வித்துவான், R. நாராயணசுவாமி அவர்கள், கும்பகோணம்.

உவமையும் தொனியும் ௧௨௮

திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள், கோவை.

நாஞ்சில்வேள் அல்லது வள்ளுவன் ௧

பத்திராசிரியர்.

மதிப்புரை ௨௧, ௯0, ௭௯, ௧௯௮

திருப்புல்லாணி நொண்டிநாடகம் (குறிப்புரையுடன்) 1—54

திருக்குறுங்குடி அழகியநம்பி பிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்) 1—56

திரு. சே. வே. ஜம்புலிங்கம்பிள்ளையவர்கள், திருமயிலை.

திருவெங்கையுலா ௪௭

திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A. B.L., மதுரை.

தமிழ்நாட்டு மூவேந்தர் ௫௭

திருவள்ளுவர் கூறும் அரசியல் ௮௧

திருவள்ளுவரின் தனிச்சிறப்பு ௨௫

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... ... | 1 | 8 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு . ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கநூல் (5) இனியநாற்பது (உரை) ... ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மகிஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | திணைத்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

குறிப்பு:-1. கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

2. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டு வெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ. 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ. 4–8–0. இதுவரை 47 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ. 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.

கடவுள் துணை.

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

## ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-சஎ.] விக்ருதி-ஹு கார்த்திகைமீ [பகுதி-க.
Vol. 47. November—December 1950 No. 1.

உள்ளுறை.


| | | |
|---|---|---|
| நாஞ்சில்வேள் அல்லது வள்ளுவன்:— | திரு. சி. கு. நாராயணசாமி முதலியாரவர்கள் | க—அ |
| நாலடியார் இருவருரைத்திருத்தம்:— | திரு. சத்தியவாகீசுவரையரவர்கள் | கூ—கசு |
| ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிக் பரமாசாரியசுவாமிகளுக்கு மதுரைத்தமிழ்ச்சங்கத்தார் படித்தளித்த வாழ்த்துப்பத்திரம்:— | | கஎ—உ0 |
| மதிப்புரை:— | பத்திராசிரியர் | உக—உச |
| பத்திராசிரியர்குறிப்பு:— | (அட்டையின் இரண்டாம்பக்கம்) | |
| திருக்குறுங்குடி அழகியநம்பிபிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்):— | பத்திராசிரியர் | 1—16 |


பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1951.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஸ்ரீ:

# பத்திராசிரியர்குறிப்பு

செந்தமிழில் புத்தகவுருவமாக வெளியிடப்பட்டுவந்த அநுபந்தமான சிறுபுலியூருலா சென்ற ஐப்பசிப்பகுதியோடு முற்றுப் பெற்றுவிட்டது. அடுத்த இக்கார்த்திகைப்பகுதிமுதல் திருக்குறுங்குடி அழகியநம்பிபிள்ளைத்தமிழ் புத்தகவுருவில் அநுபந்தமாக வெளியிடப்படுகிறது. இப்பிள்ளைத்தமிழ் திருமால்பதிகள் நூற்றெட்டுள் பாண்டிநாட்டுத் திருக்குறுங்குடித்திருமால்மீது பாடப்பட்டது; பிள்ளைத்தமிழ்க்குரிய இலக்கணங்கள் நிரம்பியது; செஞ்சொல்லும் நன்பொருளும் இனிய நடையும் அரிய கற்பனைகளும் மருவியது; இதுவரை அச்சிடப்படாதது. இதனை இயற்றினார் பெயர் முதலிய விவரம் புலப்படவில்லை. சில ஆண்டுகளுக்குமுன் என் நண்பரும் அருந்தமிழ்நூற்பணியிலே பொழுதுபோக்குபவருமான ஆழ்வார் திருநகரிப் பெரியன் திரு. வே. நா. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் இப் பிள்ளைத்தமிழின் காகிதக்கையெழுத்துப்பிரதியொன்றைத்தந்து அதனை ஆராய்ந்து நூதனமாக ஒரு குறிப்புரையும் எழுதி அச்சிட்டு வெளியிடும்படி கூறினார்கள். அந்த ஒருபிரதியைவைத்துக் கொண்டு செப்பஞ்செய்து அச்சிடுதல் இயலாதென்றுகருதி வேறு பிரதிகள் கிடைக்குமா என்று தேடினேன். இன்றுவரை கிடைக்கவில்லை. ஆகவே கிடைத்த ஒருபிரதியும் இறந்துபடாதுகாக்கும் நோக்குடன் நண்பர்தந்த பிரதியிலுள்ளவாறு இதுபொழுது வெளியிடலானேன். இப்பிள்ளைத்தமிழேட்டுப்பிரதியுடையார் கொடுத்துதவுவார்களாயின் இந்நூல் நன்குதிருந்திச் சிறப்புறும். கிடைத்த மூலத்துக்கு ஏற்ப யான்கண்ட அளவில் ஒரு குறிப்புரையும் நண்பர்விரும்பியபடி புதிதாக எழுதிச்சேர்க்கப்பட்டுளது. குறிப்புரையுட் காணப்படும் குற்றங்களைக் களைந்து குணமிருப்பிற் கொள்ளவேண்டுகிறேன். இந்தப்பிரபந்தத்தின் காயிதக்கையெழுத்துப்பிரதியைக் கொடுத்துதவிய நண்பர்திறத்து என்றும் நன்றி பாராட்டுங் கடப்பாடுடையேன்.

---

உ

கடவுள் துணை

# செந்தமிழ்.

தொகுதி—சஎ.] விக்ருதி-ஞு கார்த்திகைமீ [பகுதி—க.

Vol. 47. November—December 1950 No. 1.

## நாஞ்சில்வேள் அல்லது வள்ளுவன்

[கோவை. திரு. சி. கு. நாராயணசாமிமுதலியாரவர்கள்]

நாஞ்சில்நாடு என்பது பண்டைக்காலந்தொட்டே பெயராலும், புகழாலும் சிறந்து 'கேரளம்' என்னும் மலையாளத்தின் நிலப்பரப்பில் விளங்குகிறது. தற்காலம் அந்நாடு திருவாங்கூர் இராச்சியத்தின் ஒருபகுதியில் உள்ளது.* அந்நாட்டைத் தலைமைத்தானத்தினின்றும் வளம்படுத்துவது 'நாஞ்சில்' என்னும் பெரிய மலை. அம்மலையின்பெயரே அந்நாட்டிற்கும் பெயராய் அமைந்துள்ளது.

புலவர்பாடும் புகழ்படைத்து வரையாதளிக்கும் வள்ளன்மை மிகுந்து இரவலர்க்கு இல்லையென்னுதியும் அருங்குணமுடைய அந்நாட்டு அரசனுக்கு "நாஞ்சில்வேள்" என்னும் பெயர் இயற்பெயராய் வழங்கப்பட்டுவந்தது.

பண்டைக்காலத்தில் தமிழ்வழங்கியநாடு சேர சோழ பாண்டியர்களால் ஆளப்பட்டுவந்தது. அம்மூவரும் முடியுடைய மூவேந்தர் எனப்படுவர். அவ்வரசர்கள்காலத்திலே சிற்சிலபகுதிகள் தனிப்பட்ட உரிமைவாய்ந்த சிற்றரசர்களால் அரசுசெய்யப்பட்டுவந்தன. அத்தகைய நாடுகளில் நாஞ்சில்நாடும் ஒன்று.

---

* இந் நாஞ்சில்நாடு தென்பாண்டிநாட்டின்கண்ணதென்று உயர்திரு. மு. இராகவையங்கார்சுவாமிகள் கூறுகின்றனர்.

*

இந்த நாஞ்சில்நாட்டை ஆண்ட அரசன் வேளாண்மரபைச் சேர்ந்த குறுநிலமன்னன்; ஆதலால் நாஞ்சில்வேள் எனப்பட்டான். இச்சிற்றரசனுக்கு மற்றொருபெயர் "நாஞ்சில்வள்ளுவன்" என்பது.

வள்ளுவன் என்னும் பெயர் சங்ககாலத்தமிழகத்தில் பறையரில் ஒருவகுப்பார்க்குச் சாதிப்பெயராகாமல் தகவுடைய முடிமன்னர்கட்கு மகட்கொடைக்குரிய வேளிராகிய குறுநிலமன்னர்கட்கு வழங்கிவந்தசெய்தி ஈண்டுச் சிந்திக்கத்தக்கது.

புறப்பாட்டில் ஒருசிறைப்பெயரியனார், மருதனிளநாகனார் என்னும் பண்டைத் தமிழ்வாணர்கள் பாடிய நாஞ்சில்வேளின்பெயர் 'வள்ளுவன்' எனச் சுட்டப்படுகிறது. அது, அச்சிற்றரசன் சேர அரசன்மாட்டு அன்புடையனாய் அவனுக்குத் துணைநின்று, அச் சேரஅரசன்கொற்றத்து அருங்கடம்பூண்டு * உள்படுகருமத் தலைவனாயிருந்தபடியால் எய்திய பட்டப்பெயராகும்.

'மன்னர் உள்படுகருமத்தலைவர்† வள்ளுவர்' என்று சேந்தனார் திவாகரம் கூறுமாற்றாலும் இப்பெயருண்மை அறியலாகும்.

முற்காலத் தமிழகத்தில் 'வள்ளுவர்' என்று ஒரு சாதியில்லை. தொல்காப்பியம் துடியர்--பாணர்--பறையர்--கடம்பர் எனப் பேசுவதல்லது வள்ளுவரைப்பற்றிப் பேசுமாறில்லை.

அக்காலத்திற் புலைக்குலவகுப்பினராகிய பறையருக்கு 'வள்ளுவர்' என்னும் பட்டம் வழங்கவில்லை.

---

* உள்படுகருமத்தலைவர் என்பதற்கு — அரசர்கீழ்க் காரியத்தலைமை வகிக்கும் அதிகாரி என்பது பொருள்.

† அரசர்க்குக் கருமத்தலைவராய் உயர்ந்தபதவிவகித்தவர்க்கு 'வள்ளுவன்' என்ற சிறப்புப்பெயர் முன்பு வழங்கப்பட்டது. அரசனது கருமத் தலைவனாயிருந்ததுபற்றியே இப்பெயரை இவன் பெற்றிருத்தல்வேண்டும். "ஸ்ரீசேரகொத்துப்படையாரு.........இராயசேகராயின் வள்ளுவருங்கூடிச் செய்தகச்சமாவது" என்ற சாசனத்தொடரும் இக்கருத்தினையே வலியுறுத்தல் காண்க (S. I. 1. Vol. V. No. 776).

சாதாரணமாகப் பறையர்சாற்றும் பறையும், அதை அவர் அறையும் முறையும் வேறு. ஆனால் வள்ளுவரோ,

"கோற்றொழில் வேந்தன் கொற்ற முரசம்
பெரும்பணைக் கொட்டிலுள் அரும்பலி யோச்சி
முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சித்
திருநாள் படைநாள் கடிநா ளென்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையார்"

(காண்டம் 2. பகுதி 2. வரி 29-33.)

எனப் பெருங்கதை பேசுகின்றது.

மேலேகூறிய மூன்றுநாட்களிலுமே வள்ளுவர் என்பார், தமிழ் முடியரசர் இமிழ்கடிமுரசை வச்சிரக்கோட்டத்தினின்றும் எடுத்து யானைப்பிடர்த்தலையேற்றி அரசனையும், அனைவரையும் வாழ்த்தி முரசறைவர்; வேறு காலங்களில் அறையார். அத்தகைய வள்ளுவரை 'முதுகுடிப்பிறந்தோர்' ஆகவும், 'உயர்ந்தோர்' ஆகவும் மணிமேகலையும் (விழா—27 - 28.) பதிற்றுப்பத்தும் (30) கூறுகின்றன.

வேந்தர் பெரும்பணைக்கொட்டிலுள்ளும் வச்சிரக்கோட்டத்துள்ளும் (கோட்டம்—கோவில்) சென்று பலியிட்டுப் பூசைசெய்து முரசையெடுத்து வேழத்தின்பிடர்மிசையேற்றி, "மறவரும் தேரும் மாவுங் களிறும் சூழ்தர" உலகை அரசொடுவாழ்த்தி அணிவிழா அறையும் வள்ளுவனை இழிகுலப் புலைமகனாகக்கருத இடமுண்டா? என்று பாருங்கள்.

பறையைக் கழுத்திலிட்டறைந்து காலால் நடந்து கரையும் பறையரின்குலம் வேறு. முரசத்தை யானையின்பிடர்த்தலையேற்றிச் சேனைகள் சூழ்தர வேழமேறி உலகையும் அரசையும் வாழ்த்தி அணிவிழா அறையும் வள்ளுவரின்குலம் வேறு என்று கொள்ளக் கிடக்கின்றது.

அத்தகைய வள்ளுவனைத் 'தொல்குடிப்பிறந்தோன்' 'முதுகுடிப் பிறந்தோன்' எனக் கூறியிருக்கத் தற்காலம் பறையர்குலகுருவகுப்பினராயுள்ள வள்ளுவரில் ஒருவனென்றுகொள்ளுவதற்குச் சான்று சிறிதேனும் கிடையாது.

புறநானூறு 137, 138, 139, 140-ஆம் செய்யுட்களிற் புகழப்பெற்ற ‘நாஞ்சில்வள்ளுவன்’ என்பான் மேலேகூறிய நாஞ்சில் நாட்டுவேளாகிய சிற்றரசனே ஆவன்.

இனி, இவ்வரசனது அருங்கொடையைப்பற்றியும் சிறந்த புகழைப்பற்றியும் இரப்போர்க்கு இல்லையென்னாதியும் இனிய குணத்தைப்பற்றியும் பாடும் புலமையில் வல்லார்களாகிய ஒருசிறைப்பெரியனார், மருதனிளநாகனார், என்னும் புலவர்பெருமக்களால் பாடப்பட்டுள்ள செய்யுட்களை இதன்கீழ்க் குறித்து இக்கட்டுரையை முடிப்பாம்.

ஒருசிறைப்பெரியனார் பாடியது:—

அகவற்பா

“இரங்கு முரசி னினஞ்சால் யானை
முந்நீ ரேணி விறல்கெழு மூவரை
யின்னு மோர்யா னவாவறி யேனே
நீயே முன்யா னறியு மோனே ! துவன்றிய
கயத்திட்ட வித்து வறத்திற் சாவாது
கழைக் கரும்பி னொலிக் குந்து
கொண்டல் கொண்டநீர் கோடை காயினுங்
கண்ணன்ன மலர்பூக் குந்து
கருங்கால் வேங்கை மலரி னாளும்
பொன்னன்ன வீசுமந்து
மணியன்னநீர் கடற்படருஞ்
செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந !
சிறுவெள் ளருவிப் பெருங்க னாடனை
நீவாழியர் நின்றந்தை
தாய்வா ழியர்நிற் பயந்திசி னோரே” (புறம்—137)

“நீர்நிறைந்த பள்ளத்தின்கண் விதைத்த வித்தானது நீரின்மையாற் சாவாது கரும்புபோற் செழிப்புற்றுத் தழைக்கும்; மழையால் முகந்துசொரியப்பட்ட நீர் கோடைகாயினும் மகளிர்கண்போலக் குவளைமுதலிய மலர்கள் மலர்ந்திருக்கும்; கரிய தாளையுடைய வேங்கை மலரின் நாடோறும் பொன்போலும் அப்பூவைச் சுமந்து மணிபோலும் நீரானது கடற்கண்செல்கின்ற செழுமையான

மலைப்பக்கத்தையுடைய நாஞ்சில் என்னும் மலையையுடைய வேந்தே! ஒலிக்கின்ற முரசினையும் மிகுந்த யானைப்படையினையும் உடைய கடலாகிய எல்லையையுடைய நிலத்தின்கண்ணே யான் இன்னமும் மூவேந்தரைப் பாடினேனில்லை. நீதான் முன்னேதொடங்கி யான் அறியும் வள்ளல்: சிறிய அருவிகள் ஒல்லெனவீழாநின்ற பெரிய மலையையுடைய நாட்டையுடையாய்! நீ நெடுங்காலம் வாழ்வாயாக. நின்னைப்பெற்றோராகிய தாய்தந்தையரும் வாழ்வாராக'' என்பது இச்செய்யுளின்பொருள்.

இச்செய்யுளில் நாஞ்சில்வள்ளுவன் கொடைத்திறம் எத்துணை சிறந்ததாகக் காண்கின்றது. அன்றியும், அப்புலவர்பெருந்தகை 'யான் இன்னமும் மூவேந்தரைப் பாடினேனில்லை; நீதான் யான் முன்னேதொடங்கி அறியும் வள்ளல்' என்று விதந்துகூறுவதனால் வள்ளல் இரவலன்பால்வைத்த பேரன்பும், அவன் தகுதியறிந்து நல்கிய பரிசுமிகுதியும் பாராட்டற்குரிய தகுதியுடையனவென்றும் அறியப்படுவன.

அரிசிகேட்க யானைகொடுத்த நாஞ்சில்வள்ளுவனை மருதனிள நாகனார் பாடியது:—

அகவற்பா

''*தடவுநிலைப் பலவி னாஞ்சிற் பொருநன்
மடவன் மன்ற செந்நாப் புலவீர்!
வளைக்கை விறலியர் †படப்பைக் கொய்த
அடகின் ‡கண்ணுறை யாக யாஞ்சில
அரிசி வேண்டினே மாகத் தான்பிற
வரிசை யறிதலிற் றன்னுந் தூக்கி
இருங் §கடறு வளைஇய குன்றத் தன்னதோர்
பெருங்களிறு நல்கி யோனே அன்னதோர்
தேற்றா ஈகையு முளதுகொல்!
போற்றா ரம்ம பெரியோர்தங் கடனே'' (புறம். 140)

---

*இச்செய்யுளைத் தமிழ்மூதாட்டியாகிய ஒளவையார்பாடியதென்றுங் கூறுவர். 'தடவுச்சினை', 'தேற்றாவீகையுமுண்டுகொல்' என்பன பிரதிபேதங்கள். †படப்பை - மனைப்பக்கம். ‡கண்ணுறை - மேல்தூவுவது. §கடறு - சுரம்.

"செவ்விய நாவையுடைய புலவீர்! பெரிய நிலைமையையுடைய பலாமரத்தையுடைத்தாய நாஞ்சில்மலைக்குவேந்தன் நிச்சயமாக அறிவுமெல்லியன்; வளையணிந்த கையையுடைய விறலியர் மனைப் புறத்தின்கண் பறித்த இலைக்குமேலே தூவுவதாக யாங்கள் சிறிது அரிசிவேண்டினேமாக, தான் பரிசிலர்க்கு உதவும் முறைமையறிதலால் அவ்வள்ளல் எம்முடைய வறுமைப்பிணியைப் பார்த்ததேயன்றித் தன் மேம்பாட்டையும் சீர்தூக்கிப் பெரிய சாரஞ்சூழ்ந்த மலைநிகரும் யானையை அளித்தனன்; ஆதலால் ஒருவற்கு ஒன்றனைக் கொடுக்குமிடத்து அப்பெற்றிப்பட்டதொரு தெளியாக்கொடையும் உளதோதான், பெரியோர்கள் தாங்கள் தக்கார்க்குச்செய்யும் முறையைத்தெரிந்து பாதுகாத்துச்செய்யாரோ" என்பது பாட்டின் பொருள்.

"ஆனினங் கலித்த வதர்பல கடந்து
மானினங் கலித்த மலையின் னொழிய
மீனினங் கலித்த துறைபல நீந்தி
உள்ளிவந்த வள்ளுயிர்ச் சீறியாழ்ச்
சிதாஅ ருடுக்கை முதாஅரிப் பாண!
நீயே பேரெண் ணலையே நின்னிறை
மாறி வாவென மொழியலன் மாதோ!
ஒலியிருங் கதுப்பின் ஆயிழை கணவன்
கிளிமரீஇய வியன்புனத்து
மரனணி பெருங்குர லனைய னுதவின்
நின்னை வருத லறிந்தனர் யாரே" (புறம். 138)

இதுவும் மருதன்—இளநாகனார் பாடியது.

"பெற்றத்தினது இனம்மிக்க வழிபலவும் வந்து மான்திரள் மிக்க மலை பின்கழிய மீனினந்தழைத்த துறைபலவற்றையும் நீந்தி நினைந்துவந்த வள்ளிய ஓசையையுடைத்தாகிய சிறிய யாழையும், சிதாராகிய உடையையுமுடைய மூத்த பாணனே! நீதான் நாஞ்சில் வள்ளுவனாகிய பெருந்தகையிடத்துச் சிலவற்றைக் கருதிப் போகின்றமையின் பெரிய எண்ணத்தையுடையை; நின்னுடைய தலைவன் இப்பொழுதுபோய்ப் பின்பு ஒருநாள் பரிசிற்குவாவென்று

கழுநன்; கிளிகள் மருவிய அகன்ற புனத்தின்கண்ணே மரப்பொதும்பின்கண்வைத்த பெரிய கதிரையொப்பானாதலின். நீ அவன்பாற் பரிசுபெற்றுவருமிடத்து நின்னைப் பழைய பாணன் என்று அறிவார் யார்?" என்பது பாட்டின் பொருள்.

"சுவலழுந்தப் பலகாய
சில்லோதிப் பல்லிளைஞருமே
யடிவருந்த நெடிதேறிய
கொடிமருங்குல் விறலியரும்மே
வாழ்தல்வேண்டிப்
பொய்கூறேன் மெய்கூறுவல்
ஓடாப் பூட்கை யுரவோர் மருக!
உயர்சிமைய வுழா நாஞ்சிற் பொருந!
மாயா வுள்ளமொடு பரிசி லுன்னிக்
கனிபதம் பார்க்குங் காலை யன்றே
ஈத லானான் வேந்தே வேந்தற்குச்
சாத லஞ்சாய் நீயே யாயிடை
யிருநில மிளிர்ந்திசி னாஅங் கொருநாள்
அருஞ் சமம் வருகுவ தாயின்
வருந்தலு முண்டென் பைதலங் கடும்பே" (புறம். 139)

இதுவும் அவர் பாடியது:—

"தோள் வடுப்படப் பல முட்டுக்களையும் காவிய சிலவாய மயிரையுடைய பல இளையோரும் அடிவருந்த நெடும்பொழுதேறிய கொடிபோலும் இடையினையுடைய விறலியரும் என இவர் வாழ்தலை விரும்பிப் பொய்சொல்லேன், மெய்யேசொல்லுவேன்; புறக்கொடாத மேற்கோளையுடைய வலியோர்மரபிலுள்ளானே! உயர்ந்த உச்சியை யுடைத்தாய் உழப்படாத நாஞ்சிலென்னும் பெயரையுடைய மலைக்கு அரசே! மறவாத நினைவுடனே பரிசிற்குவந்து பொருந்திப் பின்புநின்று நின்மனம் நெகிழுஞ்செவ்விபார்க்குங் காலமல்ல, யான் வறுமையுற்றுநிற்கின்றநிலைமை; நினக்கு வேண்டிற்றுத்தருதலை அமையான் நின்னுடைய அரசன்; அவ்வரசன்பொருட்டுச் சாதலுக்கு அஞ்சாய் நீ; அவ்விடத்துப் பெரிய நிலம் பிறழ்ந்தாற்போல

ஒருநாள் பொறுத்தற்கரிய பூசல் வருகுவதாயின் எனது பசித்துன் பத்தையுடைய சுற்றம் வருந்துதலுமுளதாம்; (அதனாற் போர் வருவதன்முன்னே பரிசில்தந்துவிடுவாயாக" என்பது இப்பாட்டின் பொருள்.

இவைகொண்டு நாஞ்சில்வள்ளுவனிடத்துச் செல்லுகின்றவர் எதனையும் நிச்சயமாகப்பெற்றேவருவரென்பது புலவர்கள் வாக்குக் களால் நன்கு தெளியப்படுகின்றது.

மேற்குறித்த செய்யுட்களும் அவற்றின் பொருள்களும் வள்ளற்பெருந்தகையாகிய நம் நாஞ்சில்வேளின் பெருங்கொடைத் தன்மையையும் அரும்பெரும் மேன்மைக்குணத்தினையும் அழகு பெற எடுத்துக்கூறுகின்றன. மற்றும் அவனது சிரிய ஒழுக்க நலம், செம்மைசான்ற புகழ், கருணைப்பெருக்கம், இரவலரின் தகுதியறிந்து ஈயும் வண்மை, அஞ்சா வீரம், யாரும் மதிக்கும் அறிவின்செயல்: ஆகிய மாபெருந்தன்மைகளும் தெளிவாக அறியப்படுவதோடு சிறந்த போர்வீரனாகவும் முடியுடையவேந்த னுக்கு உறுதுணைவனாகவும் புலவர்–பாணர்–கூத்தர் முதலியோர்க்கு இல்லையென்னாதீயும் ஈகையாளனாகவும் தகுதியறிந்தீயும் சதுரனாக வும் வேளிர்குலத்தலைவனாகவும் விளங்கியிருந்தான் என்பவற்றை யும் நன்கு உணர்த்துகின்றன.

இவ்வேளிர்குலத்துவேந்தனைத் தற்காலம் வள்ளுவர் என்று வழங்கும் சாதியைச் சார்ந்தவன் என்று கூறுவார்கூற்று வலியுடைத்தாகாது. சங்க இலக்கியங்களை ஆராய்ந்து தெளிந் தார்க்கு உண்மை புலனாகும்.

---

உ

# நாலடியார்—இருவருரைத்திருத்தம்

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்

[சகூ-ஆம் தொகுதியின் உகசுக-ஆம்பக்கத் தொடர்ச்சி]

அதிகாரம்—தூய்தன்மை. பாட்டு—8.

17 பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங்
கண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொல்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் கொத்தல்
முடைச்சாகா டச்சிற் றுழி.

இதன்பொருள்:— பண்டம் அறியார்—(இவ்வுடம்பாகிய) பொருளின் கிடப்பு (இன்னதென்று) அறியமாட்டாராய், படுசாந்தும் கோதையும் கண்டு—பூசிய சந்தனத்தையும் சூடிய மாலையையும் கண்டு, பாராட்டுவார்—அதனை மெச்சிக் கொண்டாடுபவர், அச்சு இற்றுழி-உயிராகிய அச்சு முறிந்தால்(அப்பொழுது), முடைச்சாகாடு - துர்க்கந்தமுடைய வுடம்பாகிய வண்டியாவதனை, மண்டி-நெருங்கி, பெடைச்சேவல் வன்கழுகு - பெட்டைகளோடு சேவலாகிய வலிய கழுகுகள், பேர்த்திட்டு-புரட்டி, கொத்தல்-கொத்துதலை, கண்டிலர்கொல் - பார்த்திராரோ? பார்த்திருந்தால் இவ்வாறு பாராட்டார் என்றவாறு.

இற்றுழி - வினையெச்சம். முடை - அழுகிய புலால்நாற்றம். அச்சுப்போன்றிருப்பதால் உயிரை அச்சென்றார். அச்சுமரம் வண்டியைத் தாங்கியிருப்பதுபோல உயிர் உடம்பைத் தாங்கி நிற்பது. அதனால் உடம்பிற்கு வண்டி உவமையாயிற்று. தம்மைத் தாங்குதற்குப் பிறிதொன்றைவேண்டிநிற்றல் இரண்டற்குமுள்ள பொதுத்தன்மை.

"உடம்பை 'வண்டி' என்றமையின் அதன் இயக்கத்திற்குக் காரணமான அச்சு உயிராயிற்று" என்று இளவழகனாரும், இப்பொருள்பட இருவரும், இராசகோபாலபிள்ளையவர்களும் கூறினர். ஆனால் அது பொருந்தாது. உயிர் இருந்தாலும் மனமின்றாயின் உடம்பு இயங்காது. அச்சு இருந்தாலும் காளையின்றாயின் வண்டி

இயங்காது. அதனால் வண்டியை இயங்கச்செய்வது காளை, உடம்பை இயங்கச்செய்வது மனம், (உயிரன்று) என்றறியலாம். மனமாகிய அந்தக்கரணத்தைக் குதிரையாகவும் புத்தியைச் சாரதியாகவும் நூல்கள் கூறும். சாகாடு அச்சிற்றவிடத்தில் முடைச்சாகாடாகும் என்ற பொருளுணர்ச்சிபெறாய் முடைச்சாகாடு அச்சிற்றுழி என நின்றவாறே பொருளுரைத்தனர் இளவழகனாரும் பிறரும். அது பொருந்தாமையுணர்க. பெடைக்கு உணவுகிட்டுவதில் சேவல் உதவிசெய்தல் நூல்களில் பயின்றுவந்திருக்கிறது. அதனால் பெடைச்சேவல் என்பதற்கு இளவழகனார் முதலியோர் உம்மைத்தொகைப்பொருள் கொண்டது சரியன்று. புணர்ச்சியிலக்கணத்திற்கும் மாறும்.

அதிகாரம்—பொறையுடைமை. பாட்டு—7.

18 பெரியார் பெருநட்புக் கோடல்தாம் செய்த
அரிய பொறுப்பஎன் றன்றோ—அரியரோ?
ஒல்லென் அருவி உயர்வரை நன்னாட
நல்லசெய் வார்க்குத் தமர்.

இ—ள். ஒல்லென் அருவி உயர்வரை நன்னாட-ஒல்லென்று ஒலிக்கின்ற நீர்வீழ்ச்சிகளையுடைய உயர்ந்த மலைகளையுடைய நல்ல நாட்டிற்குத் தலைவனே!, பெரியார் பெருநட்புக்கொள்தல்-பெரியோரது உயர்ந்த சினேகத்தைப் பெறப் பலரும் விரும்புவதற்குக் காரணம், தாம்செய்த அரிய - தாங்கள்செய்த அருமையான = சுருங்கிச் சிறியவான பிழைகளை, பொறுப்ப என்று அன்றோ - பொறுத்துக்கொள்வர் என்று எண்ணியல்லவா? (ஆம் அவ்வாறு எண்ணியே.) நல்லசெய்வார்க்குத் தமர் அரியரோ?—நல்லனவற்றையே செய்பவர்க்குச் சினேகிதராவார் உலகில் கிட்டுதற்கு அருகியவரா=எண்ணிக்கையிற் சுருங்கி ஒருவர் இருவராகவா இருப்பர்? (அப்படியிருப்பாரல்லர்) பெருகிப் பலராயிருப்பர் என்றவாறு.

பெரியார் என்றது கல்வி செல்வங்களானும் முதுமையானும் உயர்ந்தவரை. அரிய என்பது 'இங்கே மலைப்பழம் கிடைப்பதருமை' என்பதிற் போலச் சுருங்கிய அளவையுணர்த்தும் அருமை என்பதனடியாகப் பிறந்த பெயர். அது பொறுப்ப என்பதற் கியையச் சிறிய அளவினவான குற்றங்களை உணர்த்திநின்றது. இதுவன்றி

அருமைக்கு மென்மைப்பொருளுமுண்டு. எனவே அரிய என்பது மென்மையான (-கனங்குறைந்ததான) தன்மையை உணர்த்தும்; ஆகவே அளவிற் சுருங்கிய, கனங்குறைந்த சிறுகுற்றங்களை உணர்த்துவதாயிற்று. அரியரோ என்பதில் அருமை, தொகையின் சுருக்கத்தை விளங்கக்காட்டுவதை உற்றுநோக்குக.

அரிய என்பதற்குப் பொறுத்தற்கரிய குற்றங்கள் என்று பிறரெல்லாம் கூறினரேனும், இளவழகனர் 'அரிய-பெருங்குற்றங் கள்; என்றது பொறுக்கரியகுற்றங்களை. அருமை இங்குப் பெருமை மேல் நின்றது. அரியவும், உம்மை உயர்வுசிறப்பு' என்றெல்லாம் கூறினர். ஆனல் அதிவீரராமபாண்டியர் "சிறியோர் பெரும்பிழை செய்தனராயின், பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே" என்று கூறுகின்றனர். இவற்றில் யார்சொல்வதுநேர் என்று ஆராய் வது அறிஞர் கடமையாகும். ஓ-எதிர்மறை. அன்றே என்பது உலகறிபொருள்மேல் நின்றது. அரிய நல்ல என்பன பலவின்பாற் பெயர்கள்.

அதிகாரம்—அறிவின்மை. பாட்டு—1.

19 நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்—எண்ணுங்கால்
பெண்ணவாய் ஆணிழந்த பேடி அணியாளோ
கண்ணவாத் தக்க கலம்.

இ—ள். நுண்ணுணர்வு இன்மை வறுமை—(இயற்கையும் செயற்கையுமாயுள்ள) நுட்பமான அறிவு இல்லாமையே ஒருவர்க்கு வறுமையாவது, அஃது உடைமை - அதனையுடையராயிருப்பது, பண்ணப்பணைத்த பெருஞ்செல்வம்-மிகத்தழைத்த பெரிய செல்வ மாம், (ஆனல் பொருட்செல்வமுடையார்க்குப்போல இச்செல்வ முடையவர்க்கு ஆடையாபரணங்கள் கிட்டாவே எனின்) எண்ணுங் கால் - அதனை ஆராய்ந்துபார்த்தால், பெண் அவாய் ஆண் இழந்த - (தோற்றத்தில்) பெண்தன்மையை விரும்பி ஆணடையாளமிழந்த, பேடி - பேடியும், கண் அவாத்தக்க கலம் - பார்த்தவர்கண்கள் ஆசைப்படத்தக்க ஆடை ஆபரணங்களை, அணியாளோ — தன் உடம்பில் அணிந்துகொள்ளாளா? அணிந்துகொள்வள்; அவளுக் கும் அவை கிட்டுவனவாக இருக்கின்றன என்பது எஞ்சிநின்றது.

இதனால் தெரிவதென்னவென்றால் அறிவிலிகளால் செல்வமுடைமைக்குப் பயன்களாகவும் அடையாளங்களாகவும் கருதப்படுகிற ஆடையாபரணங்களை உலகத்தாரால் அவமதிக்கப்படுகிற பேடியும் அணிகிறுளாதலால் அவற்றிற்குத் தனிப்பெருமையொன்றில்லை. அத்தகைய ஆடை ஆபரணங்களில்லாமை அறிவுச்செல்வமுடையாரது பெருமைக்குக் குறைவுசெய்வதன்று என்பது கருத்து.

மனிதரில் ஆணும் பெண்ணும் அல்லாத ஓரினம் உண்டு. அதில் தோற்றத்தில் பெண்போலிருப்பது பேடி. ஆண்போலிருப்பது அலி எனப்படும். அவாத்தக்க - அவாவத்தக்க. பேடியும் என்பதனுள் உம்மை தொக்கது. கலம் - அணிகலம்—ஆடையாபரணங்கள்.

துன்பஞ்செய்வதில் இரண்டுமொத்தலின் நுண்ணுணர்வின்மை வறுமை என்றும் இன்பஞ்செய்வதில் இரண்டுமொத்தலின் அஃதுடைமை ... ... பெருஞ்செல்வமென்றும் காரணகாரியங்களை அபேதப்படுத்தினர். இவ்வாறு சொல்வதை உபசாரவழக்கென்பர். ஓ - எதிர்மறைவினு.

பேடியணியாளோ கண் அவாத்தக்க கலம் என்பதற்குப் பேடியும் கண்கள் விரும்பத்தக்க அணிகலன்களை அணிந்துகொள்ளுதல் உண்டன்றோ. அதனை ஒத்ததே அறிவிலார் ஏனைச்செல்வமுடையராயிருந்து மகிழ்தல் என்று இளவழகனாரும் இப்பொருள்படப் பிறரும் கூறினர். இவ்வாறு பொருள்கொள்ளப் பாட்டில் இடமிருக்கிறதா என்பதை அறிஞர் ஆராயக்கடவர். அறிவிலார் ஏனைச்செல்வமுடையராயிருந்து மகிழ்தலைச் சொல்லுங்கருத்து இப்பாட்டில் இல்லை. நுண்ணுணர்வுடைமையைப் பெருஞ்செல்வமென்று புகழ்பவர் அஃதில்லாமையை வறுமை என இகழ்ந்து அஃதுடைமையாகிய பெருஞ்செல்வத்திற்கு அறிவிலிகள்கூறும் குறைபாட்டினைப் பின்னிரண்டடிகளால் உதாரணம் காட்டி மறுத்திருக்கிறுர்.

அதிகாரம்—அறிவுடைமை. பாட்டு—3.

20 எங்கிலத்து வித்திடினும் காஞ்சிரங்காழ் தெங்காகா
தென்னாட் டவருஞ் சுவர்க்கம் புகுதலால்
தன்னாற்றா னாகும் மறுமை வடதிசையும்
கொன்னாளர் சாலப் பலர்.

இ.—ள். காஞ்சிரங்காழ் - எட்டிக்கொட்டை, எந்நிலத்து வித்திடினும் - எந்தநிலத்துவிதைக்கப்படினும், தெங்கு ஆகா - தென்னையாக முளைக்காது, தென்னாட்டவரும் சுவர்க்கம் புகுதலால் - (தாழ்ந்ததென்று சொல்லப்படுகிற) தென்னாட்டுமனிதர் சிலரும் சுவர்க்கவுலகஞ்செல்கிறார்களென்று அறியப்படுகிறபடியாலும், வடதிசையும் கொன்னாளர் சாலப் பலர் - வடதிசைக்கண்ணும் தம் வாழ்நாளை வீணாளாக்குபவர் பலருண்டென்று அறியப்படுகிறபடியாலும், மறுமை - சுகந்தருவதாகிய மறுமையுலகம் என்பது, தன் ஆற்றான் ஆகும் - ஒருவனது நன்னெறியொழுக்கத்தால் அவனுக்கு உண்டாவதாம் என்றபடி.

இங்கே தென்னாடு என்பதில் தமிழ்நாடு விலக்கப்படவில்லை. எப்படியெனில், இந்நாட்டிற்குச் சொல்லப்பட்டுவந்த குற்றத்தைத் தாமும் ஏற்றுக்கொண்டு "தென்மாத்திசை வசைதீர்தரத் தில்லைச் சிற்றம்பலத்து" (பாட்டு. 338.) எனத் திருக்கோவையுடையாரும் கூறினர்.

முந்தினவுரைகாரரெல்லாம் தென்னாட்டவரும் எனப் பாடங்கொண்டிருக்கப் புதியவுரைகாரர் இளவழகனார் எந்நாட்டவரும் எனப் பாடங்கொண்டனர்; எந்நாட்டவரும் என்பதில் வடநாட்டவரும் அடங்குபவராயிருக்க அவரைத் தனியாக எடுத்துச்சொல்ல வேண்டா; ஆகலானும், அவரை எடுத்துச்சொன்னவர்க்குப் பொருளில் அதற்கிசையத் தென்னாட்டவரைப்பற்றியும் எடுத்துச்சொல்லியிருக்கவேண்டுமாகலானும் அதற்கு இடமின்றியிருப்பதால் எந்நாடு என்பது பாடமாகாமை அறிக.

அதிகாரம்—தீவினையச்சம். பாட்டு—7.

21 யாஅர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேருந் துணைமை யுடையவர்—சாரற்
கனமணி நின்றிமைக்கும் நாட! கேள்; மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு.

இ.—ள். சாரல் கனமணி நின்று இமைக்கும் நாட கேள் - மலையடிவாரங்களில் விலைபெற்ற இரத்தினங்கள் நிலைத்து ஒளிவீசிக் கொண்டிருக்கும் நாட்டிற்குத் தலைவனே! இதனைக் கேட்பாயாக, மக்கள்மனம்வேறு செய்கையும்வேறு — (செய்கையோடொத்திராமல்) மனிதரின்மனம் வேறாகவும் செய்கை அதினின்றும் வேறாகவும்

இருக்கிறது-(இரண்டும் ஒன்றற்கொன்று ஒத்திருக்கவில்லை. அதனால்), யாஅர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத் தேரும் துணைமையுடையவர் - எத்தகைய ஒருவர் மற்றொருவரது மனத்தினுணர்ச்சிகளை ஆராய்ந்தறியும் வல்லமையுடையவராக இருக்கிறார்? ஒருவருமில்லை என்பது எஞ்சிநின்றது.

பெரும்பான்மையனுபவங்கொண்டு இவ்வாறு கூறினர். இப்பாட்டின்பொருளில்நின்றும் ஒரு தடை எழுகின்றது. அஃதாவது ஒருவரதுசெய்கையோடு அவரதுமனம் ஒத்திருக்கவில்லையென்பதைப் புலவர் எப்படி அறிவார்? என்பது.

விடை:— மனத்தோடு செய்கையினிடையுள்ள ஒவ்வாமையைத் தெரிந்துகொள்வதற்கு அவற்றினிடையிற்சொல் கருவியாகவிருக்கிறது. அதன்வழியாக அவற்றின் ஒவ்வாமை அறியலாகும்.

ஒருவனது சொல்லுக்கு ஏற்ப அவன்செய்கை இல்லையானால் அவன்செய்கையை ஒத்து மனம் இராது என்பது அறியப்படும். அஃதாவது மனம் வேறு செய்கையும் வேறு என்று அறியலாகும். அஃது எப்படியெனில் மனத்தில் நிகழாமல் ஒன்று வாக்கில் வாராதாகையால் வாக்குடன் செய்கை ஒத்திராதபொழுது செய்கையுடனும் மனம் ஒத்திருக்க இடமில்லையென்பது ஊகித்தறியப்படும்.

ஒருவனுக்கு ஆகவேண்டும் கருமமொன்றைப் பிறனொருவனிடம் ஏற்பிக்குங்கால் அவனதுசொல்லையும் தோற்றப்பொலிவு முதலியவற்றையுங்கொண்டு அவன்மனம் இன்னதன்மைத்தென்று துணியமுடியாதாகையால் அவனை முழுதும் நம்பாமலும் தான் நம்பாமலிருப்பதை அவன் அறியாமலும் போற்றிக்கொண்டு அவன் செயலை இடையிடையே கவனித்துவரவேண்டுமென்பது போந்த பொருள்.

அதிகாரம்—காமநுதலியல். பாட்டு—8.

22 கடக்கருங் கானத்துக் காளைபின் நாளை
நடக்கவும் வல்லையோ என்றி—சுடர்த்தொடீஇ!
பெற்றா னொருவன் பெருங்குதிரை அந்நிலையே
கற்றான் அஃதூரு மாறு.

இ.—ள். கடக்க அரும் கானத்து - சென்று கடத்தற்கு அருமையான காட்டில், நாளை காளைபின் நடக்கவும் வல்லையோ என்றி - வழி

நாள் (எங்களைவிட்டுப் பிரியத்துணிந்ததன்றித்) தலைவன்பின்னே காலால் நடந்துசெல்லவும் வலியுடையையோ என்று வினவுகின்ருய், சுடர்த்தொடீஇ!—ஒளிபொருந்திய வளையலணிந்தகைகளையுடைய தோழீ!, பெருங்குதிரை பெற்ருனொருவன்-பெரிய குதிரையொன்றைப் பெற்றவனொருவன், அஃது ஊருமாறு அங்கிலேயே கற்ருன் - அதனைச் செலுத்தும் விதத்தைக் குதிரையைப்பெற்றவுடனு பழகித் தெரிந்துகொள்கிருன்? இல்லை; அதனைப்பெறு முன்னரே தெரிந்துகொண்டவனுயிருக்கிருன். அது போலவே யானும் தெரிந்துகொண்டிருக்கிறேன் என்பது எஞ்சிநின்றது. இது தலைவனுடன் போதற்கிசைந்த தலைவி தோழிக்குக் கூறியது.

உம்மை—எச்சப்பொருளது. ஏகாரம்—எதிர்மறைவினு,

"நெஞ்சம் புண்ணுக நெடுந்தூரந் தாநினைந்து துஞ்சுவதே மாந்தர்தொழில்" (நல்வழி) என்பதிற்போல, அங்கிலேயே கற்ருன் அஃதூருமாறு என்பதற்கு அப்பொழுதே அதனை ஏறி ஊருநெறியைக் கற்றவனுவன் என்றும், "கருத்துடையானொருவன் ஒரு நிலையை எய்திஞல் அதற்கான ஆற்றல்கள் அவன்கண் உடனே சென்றடையும்" என்றும் இளவழகனுர் கூறினர். அது பொருந்தாது.

ஒரு பொருளைப் பெற்றவன் அதனைப் பயன்படுத்தும் நெறியைப் பெறுமுன்னமே அறிந்திருத்தலை உலகில் நாம் காண்கிருேம். அன்றியும் பெருங்குதிரை என்றதனுலும் யான்கூறியபொருள் வலியுறுகின்றது. கடக்கருங்கானம் என்பதற்குக் கடந்துசெல்லுதற்கருமையானகாடு என உரைகாரர் பலரும் கூறினர். அது சரியன்று; செல்லுதல் காரணமாகவும் கடத்தல் காரியமாகவுமிருத்தலின்.

அதிகாரம்—அறன்வலியுறுத்தல். பாட்டு—5.

23 கரும்பாட்டிக் கட்டி சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

இ.—ள். ஆட்டி கரும்பு கட்டி சிறுகாலை கொண்டார்-ஆலையை ஆடுவித்துக் கரும்பைக் கட்டியாக்கி உரியகாலத்திற் கொண்டவர், துரும்பு எழுந்து வேங்கால் - சாறு எடுத்த சக்கை கொழுந்து

விட்டு எழுந்து எரிகையில், துயர் ஆண்டு உழவார் - துயர்கொண்டு மிக வருந்தார், (அதுபோல) வருந்தி உடம்பின் பயன்கொண்டார் - (புலங்களை அடக்குதலாலும் விரதங்களை அனுட்டிப்பதாலும்) வருந்தி உடம்பால் கொள்ளத்தகும்பயனாகிய அறத்தைச் செய்துகொண்டவர், கூற்றம் வருங்கால் பரிவது இலர் - தம் உயிரைக்கொள்ள நமன் வருகையில் உடம்பின் அழிவு குறித்து வருந்தார் என்றவாறு.

ஆட்டி - கரும்பாலையை ஆடுவித்து. சிறுகாலை - உரிய சமயம். அவ்வக் கருமங்களைச் செய்தற்குரிய அல்லது செய்யத் தவறக் கூடாத சமயம் என்பது பொருள். இப்பொருளை அச்சொல் எவ்வாறு உணர்த்துகின்றது எனின் செய்யத்தவறக்கூடாத சமயம் என்பது எப்பொழுதும் சுருங்கியதாகவே இருக்கும்; அதனால் உரிய சமயத்தைச் சிறுகாலை என்ற சொல்லால் தெரிவித்தார்.

இனி, கரும்பாட்டிக் கட்டிகொள்வதில் உரியகாலம் தவறக் கூடாது என்பது தெரிவிக்கக் "கட்டி சிறுகாலைக்கொண்டார்" என்று கூறியிருக்க, சிறுகாலையைப் பிரித்துக் கரும்பாட்டுதலுக்கு அடையாக்கி, 'பதனழிதற்குமுற்காலத்திலே' என இருவரும், 'மிக்க காலைநேரத்திலே' என இளவழகனாரும் பொருள்கூறினர். கரும்பின் பதனழிவும் அழியாமையும் சொல்வதற்கு இது இடமன்று; சாறெடுத்தற்கு மிக்க காலைநேரம் வேண்டுமென்பதும் இல்லை.

மேலும், எழுந்துவேங்கால் என்பதை துரும்பெழுந்து எனக் கூட்டி அக்கரும்பு, பின் 'துரும்பாகித்தோன்றி' என இளவழகனாரும், 'சக்கை நெருப்பிற் பொருந்தி' என இருவரும் உரை கூறினர். இதுவும் சரியன்று. எழுந்துவேதல் - சக்கைக்குவியல் சுவாலையால் உயர்ந்தெரிதல்.

அன்றியும், துயராண்டு (துயர்கொண்டு) என வினையெச்சமாக நிற்பதனைப் பிரித்து இடைச்சொல்லாக்கி அவ்விடத்தில், அது கண்டவிடத்தில் என்றுரைத்தனர். துரும்பெழுந்துவேங்கால் என்பதே அப்பொருளைத் தெரிவித்தலின் பிரித்துக்கூட்டி இடர்ப்பட்டுப் பொருள்கொள்ள அவசியமில்லை.

ஸ்ரீ:

திருக்கயிலாயபரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து

இருபதாவதுமஹாஸந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகசுவாமிகள்

விக்ருதியாண்டு புரட்டாசித்திங்கள் 19 (5-10-1950)உ வியாழக்கிழமை

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கு விஜயம்செய்தபொழுது

அச்சங்கத்தார் அன்புடன் படித்தளித்த

# வாழ்த்துப்பத்திரம்.

[இயற்றியவர்:—மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியரும் செந்தமிழ்ப்பத்திராசிரியருமான T K. இராமாநுஜையங்கார்.]

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

தரவு.

பூமகனார் படைப்பில்வரு புன்மைதவிர்ந் துயிர்களெலாம்
சேமமுற மாறருளத் திருவுளங்கொள் பரம்பொருளாம்
அந்திவண்ணர் தங்கயிலை யகம்படித்தொண் டாற்றிமகிழ்
நந்திமுதற் பதின்மரென நண்ணியுமங் கமையாராய்க்
கருமூலம் அழித்தொழிக்குங் கவிமலரால் அருச்சனைசெய்
திருமூலர் அமர்ந்துறையும் தென்துறைசைக் குருவாராய்
ஒருபதின்மர் மேலுமொரு பதின்மரென உலகுரைக்க
வருபெரியோர் தம்முள்நிறை மாண்புமிகும் இறையருளால்
என்றுமுள செந்தமிழோ டியற்சைவ நெறிபுரந்து
நன்றருளிர் அம்பலவாண நாமமுறு குருபரனே!

## தாழிசை.

மாதான கூறுடையான் மகிழ்ந்துறையும் புகழ்த்துறைசை
ஆதீனத் தார்பெருமை அளவிடவல் லாரெவரே !

ஆலயநிர் மாணமுதல் அருந்தமிழ்நூ லாக்கல்வரை
ஞாலமிசை யெழுசெயலும் நயந்ததுநின் மரபன்றோ !

பொய்கண்ட புறச்சமயம் புறங்காட்டப் புலங்கொண்டு
மெய்கண்டார் பெருமையிந்த மேதினியில் மலைவிளக்கே !

காபாலி பெருமையெலாங் கட்டுரைக்குஞ் சிவஞான
மாபாடியம் உதவும் வள்ளலையார் அறியாரே !

இலக்கணக்கொத் தெனும்நூலை யிவ்வுலகுக் கீந்தோரும்
மலக்கணங்கள் அறுத்தொழிக்கும் வண்டுறைசை மாதவரே !

வண்டுறைசை யாதீனம் மகிழ்ந்துதலை யளிசெய்யத்
தண்டமிழ்நூல் யாத்தளித்த சான்றோர்கள் பற்பலரே !

செந்தமிழ்நா வலர்திலகன் செய்யபுகழ் மீநாட்சி
சுந்தரனைப் புரந்ததுவும் துறைசையுறும் நின்மரபே !

இத்தரையோர் சங்கஇலக் கியங்களெலாம் இனிதுணர
உத்தமதா னத்தவரை யுதவியதும் நின்மரபே !

உலகமெலாந் தொழுஞ்சேது நாட்டரசர் உவந்துதொழ
நிலமிசையோர் பாராட்ட நிலவியதும் நின்மரபே !

அடிமைநிலை நீங்கியற வாட்சிபெறு பாரதத்துக்
குடியரசு கொளச்செங்கோல் கொடுத்ததுநின் புகழன்றோ !

இமையவராய் உயிர்களெலாம் இறைபணியிற் றலைப்படவே
சமயநூல் பலதரும்நின் தண்ணளிக்கும் வரம்புளதோ !

அரந்தையெலாம் அகன்றுதமிழ் அகிலமெங்கும் முழங்கிடவே
கரந்தையுறு தமிழ்ச்சங்கங் காப்பதுநின் இசையன்றோ !

இடைமருதூர் ஆங்கிலக்கல் லூரியிடை யூறின்றி
நடைபெறக்காப் பதும்நினது நல்லருளின் விளைவன்றோ !

இப்புவியின் மக்கள்பல கலைத்துறையில் இசைபெறநின்
ஒப்புரவு போற்பிறிதோர் ஊதியமும் உளதுகொலோ!
உரைப்பார்கள் உரைப்பவெலாம் உன்புகழே யென்றால்இத்
தரைப்பால்நின் புகழளந்து சாற்றலெமக் கெளிதாமோ!
மூர்த்திதலம் தீர்த்தமெலாம் முறைவணங்கும் நின்விஜய
யாத்திரையால் நலமனைத்தும் இவ்வுலகம் எய்துகவே!

அராகம்.

பத்தியொடு பசுவியல் பகர்தலை யியலும்நுண்
மதிகொடு விரிவுற மரபுளி யுதவுவை!
நினையடை பவருளம் நிலவிட அருமறை
தனையருளுவையது தரவலர் பிறரிலை!
எதுநின பணியஃ திறைபணி யெனவுறும்
அதுநின பெருமையஃ தறிபவர் சிலர்சிலர்!

அம்போதரங்கம்.

ஒன்றறியும் உளத்தினை நீ! உயிர்க்குதவும் தவத்தினை நீ!
நன்றருளும் திறத்தினை நீ! நயத்தகுபல் குணத்தினை நீ!
அஞ்செழுத்தும் அகநினைவாய்! அரனடிகள் முடிபுனைவாய்!
நெஞ்சுருக்கும் துதிசொல்வாய்! நிலைகுலைக்கும் விதிவெல்வாய்!

பொறைபடைத்தனை! கறைதுடைத்தனை!
பொய்கெடுத்தனை! மெய்யெடுத்தனை!
மறைவளர்த்தனை! மிறையழித்தனை!
மதிதெளித்தனை! கதியளித்தனை!

தனிச்சொல்

எனவாங்கு

சுரிதகம்.

நேரிசையாசிரியப்பா.

நாவலர் பரவ நண்ணிய வரோதய!
வருக! வருக! வருக! நின் வரவு

நல்வரவாகுக! பல்புகழ்த் தேசிக!
வாழி! வாழி!நீ ஊழிபல் ஊழி
யார்தவம் நினையீண் டெழுந்தருள் வித்ததென்
றறியேம் ஆயினும் அறிகுவ தொன்றுண்
டதுநின் வரவால் அமுதன தமிழும்
அத்தமிழ் வளர்க்கும் இத்தமிழ்ச் சங்கமும்
சங்கக் கிளைகளும் சாலச் சிறந்து
நெடிது வாழ நிறைதவத் துயர்க்க
நின்னா ருருளும் மின்னார் முகிலென
வரையா துதவும் வண்மையர் பொருளும்
நாவலர் நட்பும் காவலர் பெட்பும்
மண்மிசை மாந்தர் உண்மிசை யன்பும்
ஒருங்கியைந் தனவா யுற்றெம்
உளமகிழ் பூப்ப உதவும் என்பதுவே.

---

நேரிசைவெண்பா.

செய்ய தமிழ்மொழியின் சீர்மை யுலகுணரப்
பொய்யில் சிவசமயப் பொற்போங்க—வையமிசை
வாழியரோ வாழி! வளர் துறைசை யாதீனம்
ஊழிதோ றாழி யுயர்ந்து.

இங்ஙனம்,

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்.

---

உ

# மதிப்புரை

---

ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் நினைவுமலர் [திருவாவடுதுறையாதீனத்தின் 40-ஆம் வெளியீடு]:— தொகுத்தவர்: திருவாவடுதுறையாதீனவித்துவான் உயர்திரு த. ச. மீநாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள். வேண்டுவோர் தொகுப்பாளர்க்கு எழுதிப் பெறலாம்.

ஸ்ரீ அம்பலவாணதேசிக பரமாசாரிய சுவாமிகள் ஈசுவர ஆண்டு ஐப்பசித்திங்கள் 24-ஆம்நாள்முதல் விக்ருதியாண்டு பங்குனித் திங்கள் 30-ஆம் நாள்வரை (1937-ஆம் ஆண்டு நவம்பர்மீ 9உ முதல் 1951-ஆம் ஆண்டு ஏப்ரல்மீ 12உ வரை) திருவாவடுதுறையாதீனத்தில் இருபதாவது குருமகாசன்னிதானமாக வீற்றிருந்தவர்கள்.

திருவாவடுதுறை காவிரிநீர்வளம்மிக்க சோழநாட்டிலே திகழ்வது; தல தீர்த்த மூர்த்தி மான்மியங்களாற் சிறந்தது; அபிஷேக பரம்பரையினரான சித்தாந்தசைவகுரவர் எழுந்தருளியிருக்கும் திருமடங்களைத் தன்கட்கொண்டு மேலும் பெருமைபெற்று விளங்குவது.

திருவாவடுதுறையாதீனம், தமிழ்நாட்டிலே சித்தாந்தசைவ நெறியும் தெய்வச்செந்தமிழ்மொழியும் சிறந்தோங்கவளர்த்ததனால் அழியாதபுகழெய்திநின்ற ஆதினங்களுள் ஒன்று.

இவ்வாதீன குருபரம்பரையானது திருக்கயிலாயத்திலே தக்ஷிணாமூர்த்தியாயெழுந்தருளியுள்ள ஸ்ரீகண்டருத்திரர்முதற் றொடங்குவதாதலின் திருக்கயிலாயபரம்பரையென்று சிறப்பித்துச் சொல்லப்படும். அது உபதேசபரம்பரையென்றும் அபிஷேகபரம்பரையென்றும் இருவகைப்படும். அவற்றுள் உபதேசபரம்பரையானது தேவபரம்பரை, பூதபரம்பரை என இரண்டுவகைப்படும்.

திருநந்திதேவர், சனற்குமாரமுனிவர், சத்தியஞானதரிசினிகள், பாஞ்சோதிமுனிவர் என்னும் நால்வரும் தேவபரம்பரையினராவர். இவர் அகச்சந்தானத்தார் எனவும் தேவசந்தானத்தார் எனவும் வழங்கப்படுவர்.

மெய்கண்டார், சகலாகமபண்டிபர், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் என்னும் நால்வரும் பூதபரம்பரையினராவர். இவர் புறச்சந்தானத்தார் எனவும் கூறப்படுவர்.

உபதேசபரம்பரையில் உமாபதிசிவத்துக்குப்பின் அருணமச்சிவாயர், சித்தர்சிவப்பிரகாசர் என்னும் இருவரும் குரவராய் விளங்கினர்.

அபிஷேகபரம்பரை பஞ்சாக்கரதேசிகர்முதல்வருவது. இப்பஞ்சாக்கரதேசிகரே உபதேசபரம்பரையில் இறுதிநின்ற சித்தர் சிவப்பிரகாசர்பால் தீக்ஷைபெற்றவர்; திருவாவடுதுறையில் முதன் முதல் இவ்வாதீனமடம்நிறுவிய பெருமையுடையவர்.

இவ்வாதீனகுரவர்பலரும் உலகியலறிவொடு வடமொழி தென்மொழி நூலறிவும் நற்கேள்வியும் பிறழாத தூய தவநெறியொழுக்கமும் சைவமுதலிய சமயநூற்பயிற்சியும் இசைமுதலிய பிறகலையுணர்ச்சியும் வாய்ந்தவர்கள். அவராதரவுபெற்ற தம்பிரான்களுள்ளும் புலவருள்ளும் பலகலைத்துறையறிவுவாய்ந்து சிறந்தார் பலர். இவ்வாதீனகுரவர்பாலும் புலவர்பாலும் கற்றுத்தேர்ந்த பேரறிஞராயினரும் பலர்.

செந்தமிழ்நாவலர்திலகரான மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் முதலியோரும், பிள்ளையவர்கள்பாற்கற்றுத்தெளிந்து, இறந்தொழியும்நிலையிலிருந்த பழந்தமிழ்நூல்கள்பலவற்றையும் நன்காராய்ந்து கற்பார் எளிதின் உணர அச்சிட்டுதவி என்றும் இறவாது வாழ்வித்து அதனால் தாமும் இறவாதபுகழெய்திய பெருவண்மையினரான பேராசிரியர் உ. வே. சாமிநாதையரவர்கள் முதலியோரும் இவ்வாதீனத்தொடர்புடையரென்பது உலகறிந்த செய்தியன்றோ!

இவ்வாதீனத்தின் கிளைமடங்களும் கட்டளைமடங்களும் தமிழ்நாட்டில் ஆங்காங்கு நற்பணிகளாற்றிவிளங்கிவருகின்றன. இவ்

வாதீனத்தார்செய்த சமயத்தொண்டும் தமிழ்த்தொண்டும் அளவற்றன. இவர்களுடைய வள்ளன்மையால் தமிழுலகடைந்த நன்மைகள் அளப்பில.

இவ்வாதீன அபிஷேகபரம்பரையில் இருபதாவது மஹாஸந்நிதானம் ஸ்ரீ அம்பலவாணதேசிகபரமாசாரியர் இவ்வாதீனகர்த்தராயிருந்த பதின்மூன்றாண்டுகளில் ஆற்றிய நற்பணிகள் பற்பல.

ஆதீனத்துக்கு ஏற்பட்டிருந்த பெருங்கடனைத் தீர்த்தார்கள்; தம் அறிவாற்றலால் ஆதீனத்தின்வருவாயை மிகுவித்தார்கள்; கோயில்களையும் திருவாவடுதுறைமடத்தையும் கிளைமடங்களையும் கட்டளைமடங்களையும் பெரும்பொருட்செலவிற் பழுதுநீக்கிப் புதுப்பித்தார்கள்; ஆதீனத்துக்கும் கிளைமடங்களுக்கும் உரிய நிலங்களைத் திருத்திப் பண்படுத்தி நிறைவிளைவுடையவாகச் செய்வித்தார்கள்; பலஆலயங்களில் திருப்பணிகளையும் கும்பாபிஷேகம் முதலியவற்றையும் குறைபறநடத்துவித்தார்கள்; ஆலயவிழாக்களுள் நின்றிருந்தவற்றை மீட்டும் தொடங்கி நடைபெறச்செய்தார்கள்; பல நகரங்களில் யாவரும் பயனடையும்படி நன்னீரூற்றுக்களையும் பூங்காக்களையும் நல்ல நூல்நிலையங்களையும் அமைப்பித்தார்கள்; பல தலங்களில் தேவாரபாடசாலைகளை நிறுவி நூற்றுக்கணக்கான மாணவர் தேவாரமுதலிய திருமுறைகளைப்பயின்று நலமடையவுதவினார்கள்; நல்லறிஞர் பலரைச் சைவப்பிரசாரகராக்கி மக்கட்குச் சமயவுணர்ச்சியை ஊட்டினார்கள்; சிறியபெரிய துண்டுப்பிரசுரங்களாலும் அரியபெரிய நூல்வெளியீடுகளாலும் மக்கள் உறுதி பெறவருளினார்கள்; சங்கங்களுக்கும் சபைகளுக்கும் கழகங்களுக்கும் ஆங்கிலக்கல்லூரிகளுக்கும் மூலதனமாக ஒரேதடவையிற் பெரும்பொருளுதவியும் ஆண்டுதோறும் நன்கொடையளித்தும் போந்தார்கள்; பாரதநாட்டுக் குடியரசு சிறந்தோங்கப் பல்லாயிரம் பசும்பொன்னாற் செங்கோல் செய்வித்தளித்தார்கள்; அவ்வப்போது அரசாங்கப்பணிகளுக்கும் நாட்டுப்பணிகளுக்கும் ஏற்றவாறு பொருளுதவிபுரிந்தார்கள். தலயாத்திரைபுரிந்து சமயப்பற்றும் தமிழ்ப்பற்றும் மக்கள் உள்ளத்தே தழைத்தெழச்செய்தார்கள். இவர்கள் பெருமை விரிக்கிற் பல்கும்.

இவர்கள் தலயாத்திரை யெழுந்தருளிய காலத்து அங்கங்கே நகரமக்களும் கழகத்தாரும் நன்குமதித்து விழாக்கொண்டாடி வரவேற்பளித்தும் வாழ்த்துரைவழங்கியும் பெருமகிழ்வுற்றனர். வாழ்த்துரைகளுள் மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கு இவர்கள் விஜயம் செய்தகாலத்து அச்சங்கத்தார் மகிழ்ந்து வாசித்தளித்த வாழ்த்துப்பத்திரம் முன்னேசேர்க்கப்பெற்றுளது.

இவ்வாறு தம்முடைய பேரறிவாலும் தண்ணளியாலும் ஒப்புர வறியும் ஒண்மையாலும் இப்புவிமகிழும் வண்மையாலும் சமயஞ் சிறக்கத் தமிழ்தழையச் சான்றோருவப்ப இறைமகிழச் சிறந்த பணிகளாற்றிவந்த இவர்கள் தமிழ்நாட்டினர் மனங்கலங்க விகிருதியாண்டு பங்குனித்திங்கள் முப்பதாம்நாள் சிவபரிபூரண மெய்தினார்கள்.

என்றும் ஒழியாத புகழுருவில் நிலைத்த இவர்களுக்குப் பின் இவர்கள் வழித்தோன்றலாய்க் கருவிலே திருவுடையரான ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகபரமாசாரியசுவாமிகள் இவ்வாதீனகர்த்த ராக வீற்றிருந்து தமிழும் சைவமும் தழைப்பத் தண்ணளி பொழிந்துவருகிறார்கள்.

இவ்வாதீனத்தைப்பற்றியும் இவ்வாதீனகுரவரைப்பற்றியும் அவருள் இருபதாவது குருமஹாசந்நிதானமான ஸ்ரீ அம்பலவாண தேசிகமூர்த்திகளைப்பற்றியும் அறிந்துகொள்ளவேண்டியவற்றை யெல்லாம் நன்குமுறைப்படத்தொகுத்துப் படிப்பார் உவந்துபடிக் கும்படி இனிது விரித்தெழுதி முடித்த இந்நினைவுமலரைப் பல்லாற் றானும் அழகுற அச்சிட்டுதவிய வித்துவான் திரு. த. ச. மீநாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் செய்தக்கசெய்த சிறப்புடையராயினார்கள். வாழி திறைசையாதீனம் வாழி அதன் மாண்புடைக் குரவர்குழு.

பத்திராசிரியர்.

ஸ்ரீ:

# திருக்குறுங்குடி

# *அழகியநம்பிபிள்ளைத்தமிழ்

## கடவுள்வணக்கம்

### கலைமகள்

1 பூவான வெண்டா மரைப்பொகுட் டாசனப்
பொற்புந் திரண்டபடிகம்
புழைபடப் பணிபடுத் தியமணித் தாவடப்
பூணுமெய்ச் சதுமறைந்நூற்
பாவான பொத்தகமும் ஞானமுத் திரையும்வட
பகிரதி துளும்புகரகப்
பான்மைசேர் செங்கையும் தவளமே னியுமுடைப்
பனுவல்மா தைத்துதிப்பென்
தேவாதி தேவனழ கியநம்பி பச்சைச்
செழுந்துளப மாலைமேவும்
திண்புயக் கனசயில சுந்தரப் பிரபைதரு
தென்குறுங் கைக்குரிசில்சீர்
நாவாணர் போற்றவரு சேவிக்க வாழ்விக்கும்
நம்பியெதி ரொப்பிலாத
நம்பிக்கி யான்கூறு பிள்ளைத் தமிழ்ப்பாடல்
நாளுநா ளுந்தழையவே. (க)

குறிப்புரை:—படிகம்-ஸ்படிகம்=பளிங்கு. புழை-துளை. பணிபடுத்திய-வேலைப்பாடமையச்செய்த. மணித்தாவடப்பூணும் - பளிங்குமணிமாலையாகிய அணிகலமும். பகிரதி - கங்கை. துளும்பு - அசைந்துவழிகின்ற. கரகம் - கமண்டலம். கரகப்பான்மைசேர் செங்கை - கமண்டலந்தாங்கிய தகுதியுடைய செவ்விய கை. தவளம் - வெண்மை. தவளமேனி - வெண்மை நிறமுடைய திருவுடம்பு. பனுவல்மாது - கலைமகள். முன்னிரண்டடிகள்

---

* சுவாமி அழகியநம்பிபேரில் பிள்ளைக்கவி என்பது பிரதிபேதம்.

*

கலைமாதின் திருவுருவை வருணிக்கின்றன. அழகிய வெள்ளைத்தாமரைப் பொகுட்டாசனத்து வெள்ளிய திருமேனியிலே பளிங்குமணிப்பூண்களும், ஒருகரத்துப் பளிங்குத்தாவடமும், மற்றோர்கரத்துப் புத்தகமும், வேறோர் கரத்துச் சின்முத்திரையும், பிறிதொருகரத்துக் கங்கைநீர்ததும்பு கமண்டலமுங்கொண்டு விளங்கும் கலைமகளைத் துதிப்பேன் என்றவாறு. சின்முத்திரை - ஞானமுத்திரை = அதாவது வலக்கைக் கட்டைவிரலோடு சுட்டுவிரலை வளைத்துப்பொருத்திய (உபதேச) நிலை. இங்கே சொல்லப்பட்ட தியான விஷயமான கலைமகளுருவவருணனை, "புத்தகம் படிகமாலை குண்டிகை பொருள்சேர் ஞான - வித்தகம் தரித்த செங்கை விமலை" என்ற முன்னோர் பாசுரத்தையொட்டியது; வெண்டாமரைத்தவிசில் வெள்ளிய திருமேனியிலே வெள்ளிய அணிகளும் ஆடையும் பூண்டு ஒருதிருக்கரத்திலே பளிங்குமணித்தாவடமும் மற்றொன்றில் ஏடும் ஏனையிருகரத்தும் வீணையும் தாங்கிய கோலமாகக் கூறப்படுதலும் உண்டு. தேவாதிதேவன், அழகிய நம்பி, குறுங்கைக்குரிசில், நாவாணர்போற்றவருநம்பி, சேவிக்க வாழ்விக்கும்நம்பி, எதிரிலாதநம்பி, ஒப்பிலாதநம்பி என்பன திருக்குறுங்குடித் திருமால் திருநாமங்கள். திண்புயக் கன சயில சுந்தரப் பிரபை-வலிய தோளாகிய பெரியமலையின் அழகொளி. குறுங்கை - குறுங்குடி. குரிசில் - ஆடவருள் உயர்ந்தோன். நாவாணர் - நாவலர். எதிரிலாத - பகையில்லாத. நம்பி - புருடோத்தமன். நம்பிக்கு யான் கூறு பிள்ளைத்தமிழ்ப்பாடல் நாளும் நாளும் தழைய, பனுவல் மாதைத் துதிப்பென் என வினைமுடிவுகொள்க. (1)

ஸ்ரீ ஆண்டாள்

2 உத்தமப் பத்தினிக் குலமாதர் கற்பினுக்
குரிமையாற் கணவனைக்கண்
டுவகையிற் பரிமளப் பிணையல்சூட் டிப்புணர்ந்
துலகியல் வழாதமுறையிற்
கொத்திருக் குங்குழற் சூளிகையில் வடபெருங்
கோயில்மா தவனுவப்பக்
கோதைசூ டிக்கொடுத் தருளிய பிராட்டிபொற்
குரைகழல் வணங்குவெனியான்
சித்திரக் கோபுரப் பத்தியிற் பருமணித்
தினகரக் கதிரெறிக்கும்
தென்குறுங் காபுரிக் குழகனழ கியநம்பி
தேவகித் திருவினுதரப்

புத்திரக் கருமுகிற் குழவிகோ சலைபெற்ற
புண்ணிய னசோதைபாலன்
புகழ்வளந் திகழ்தரும் பிள்ளைக் கவிப்பாடல்
புவியெங் கணுந்தழையவே. (௨)

குறிப்புரை:—ஆண்டாள் பெரியாழ்வார்திருமகள். உத்தமப் பத்தினிக் குலமாதர்கற்பினுக்கு உரிமையால் - சிறந்த மனைவிமார்களாகிய குடிப்பிறந்த மகளிருடைய கற்புக்கு ஏற்ற தகுதியால். உவகை - மகிழ்ச்சி. பரிமளம் - வாசனை. பிணையல் - மாலை. வழாத - வழுவாத. கொத்து - பூங்கொத்து. குழல் - கூந்தல். சூளிகை - தலையணி; உச்சிக்கொண்டையுமாம். வட பெருங்கோயில் மாதவன் - ஸ்ரீவில்லிபுத்தூர்த் திருமால். உவப்ப - மகிழும் படி. கோதை - மாலை. சூடிக்கொடுத்தருளிய பிராட்டி - ஸ்ரீஆண்டாள். பொற்கழல், குரைகழல் என இயைக்க. குரை கழல் - (நூபுரம்) ஒலிக்கின்ற திருவடி. உலகியல்வழாதமுறையிற் பிணையல் சூட்டிப்புணர்ந்து என மாறிக்கூட்டுக. உலகியல் - சாதாரணமக்கள் நடைமுறை; மேலையார் ஒழுக்கமுறையுமாம். பரிமளப்பிணயல்சூட்டி - வடபெருங்கோயிலுடையானுக்கு மணமுள்ள மாலைதொடுத்தணியும்பணிபுரிந்து. பிற்கூறியது ஆண்டாள் முன்னே தான் குழலில் அணிந்து பின் அம்மாலையை வடபெருங் கோயிலுடையானுக்குச் சூட்டுமாறு நல்கியதனை. அன்றி முற்கூறியது பாமாலைசூட்டியதும் பிற்கூறியது பூமாலை சூட்டியதுமாகும். பாமாலைக்குப் பரிமளமாவது தொனி முதலிய அணிநயமாம். சித்திரக்கோபுரப்பத்தியில்- பலவண்ணங்களும் தீட்டப்பட்ட கோபுரவரிசைகளில். பருமணித்தினகரக் கதிர் எறிக்கும் - பெரிய மாணிக்கமாகிய சூரியகிரணம் விளங்கும்படியான. குறுங்காபுரி - குறுங்குடி. குழகன் - இளமைத்தன்மை(என்றும்) உடையான். குறுங்காபுரிக் குழகன், அழகியநம்பி, தேவகித் திருவின் உதரப் புத்திரக் கருமுகிற்குழவி, கோசலைபெற்றபுண்ணியன், அசோதைபாலன் என்பன திருக்குறுங்குடித்திருமால் திருநாமங்கள்; அடுக்கு. உதரம் - வயிறு. முகிற் குழவி - முகிற்கன்று. முகில் - மேகம். தேவகி - வசுதேவர்மனையாள்; கண்ணனைப்பெற்ற தாய். கோசலை - இராமனைப்பெற்ற தாய். அசோதை - நந்தகோபன்மனைவி; கண்ணனை வளர்த்ததாய். திருக்குறுங்குடியின்கண் என்றும் மாறாத இளமையும் அழகும் உடையவனாக எழுந்தருளியிருக்கின்றவனும் தேவகியின்புத்திரனாகிய கரியமுகிற்குழவியும் கோசலைபெற்ற புண்ணியனும் அசோதைபாலனுமாகிய நம்பியின் புகழ்வளம் திகழ்தரும் பிள்ளைக்கவிப் பாடல் புவியெங்கணும் தழையுமாறு, யான் சூடிக்கொடுத்தருளிய பிராட்டி கழல் வணங்குவென் என்க. பிள்ளைக்கவி - பிள்ளைத்தமிழ். (2)

நாதமுனி

3 ஏட்டின் புறத்தென்று மெழுதா மறைப்பொருளை
யெழுதும்வண் டமிழ்மறைப்பா
வென்னும் படிக்குமகிழ் மாறனரு ளியதுலகம்
ஈடேற ஏட்டின்மீட்டும்
நாட்டும் படிக்குவர மெய்தியதை வீரநா
ராயணர்க் கருளுமுரவோன்
நாதகீ தப்புலமை வழுவாத தேசிகன்
நாதமுனி யைத்துதிப்பென்
பாட்டின் புறம்பழகு கவுசிகன் கொலையினைப்
பயில்பிரம ராக்கதன்கைப்
பட்டுமீ ளச்சென்று பருகெனப் பருகாது
பரமபதம் வேண்டநூலுட்
கோட்டும் படிக்கதனை யவனிலவ னுக்குக்
கொடுத்துமுன் புகழ்கொண்டமால்
குழகனழ கியநம்பி புகழினுற் செஞ்சொற்
கொழிக்குமிக் கவிதழையவே. (௩)

குறிப்புரை:—நாதமுனி-வைணவசமயாசாரியரில் ஒருவர். என்றும் ஏட்டின்புறத்து எழுதா மறை என்க. ஏட்டின்புறத்து - ஏட்டில். மகிழ்மாறன் - நம்மாழ்வார். உலகம் ஈடேற என்பது உலகம் ஈடேற அருளியது எனவும் உலகம் ஈடேற ஏட்டின் மீட்டும் நாட்டும்படிக்கு எனவும் கொள்ளும்படி நின்று இடைநிலைத்தீபகமாயிற்று. அருளியது - அருளிச்செய்த திருவாய்மொழி, திருவாசிரியம், திருவிருத்தம், பெரியதிருவந்தாதி என்னும் பிரபந்தங்கள். ஈடேற - உய்யும்படி. ஏட்டின் மீட்டும் நாட்டுதலாவது நம்மாழ்வாரருளிய பிரபந்தங்கள் முன் ஏட்டில் எழுதப்பட்டிருந்தவை பின் காலச்செலவில் பயில்வாரும் எழுதுவாருமின்றி மறைந்தழிந்தநிலையில் அவற்றை மீட்டும் தேடிப்பெற்று ஏட்டில் ஏறியருளப்பண்ணுதலாகும். வரமெய்தி - வரம்பெற்று. அதை-அவ்வாறு ஏட்டில் ஏறியருளப்பண்ணிய தமிழ்மறையை. வீரநாராயணர்க்கு - மன்னார்கோவில் இறைவனுக்கு. அருளும் - பாடிக்காட்டிய. உரவோன் - அறிஞன். உரவோனும் வழுவாத நாதகீதப்புலமை வாய்ந்த தேசிகனும் ஆகிய நாதமுனி என்க. பாட்டின்புறம்பழகு - இசையிற் பழகிய. கவுசிகன் - நம்பாடுவான். கொலையினைப்பயில் - கொலைத்தொழிலைப்

பழமைய; இன் அல்வழிச்சாரியை. கவுசிகன் கொலையினைப்பயில் பிரமராக்க தன்கைப்பட்டு மீளச்சென்று பருகெனப் பருகாது பரமபதம்வேண்ட என்றது: கவுசிகன் பிரமராக்கதன்கைப்பட்டுக் குறுங்குடித்திருமாலை யாழ்மூலம் கைசிகம் என்ற பண்பாடி உவப்பித்து மீண்டுவந்து பிரமராக்கதனுக்கு உணவாவதாக உறுதிகூறிச்சென்று அவ்வாறேசெய்து மீண்டுவந்து தன்னை உண்ணும்படி பிரமராக்கதனை வேண்ட, அவன் கவுசிகனை உண்ணாது அவன் பாடிய இசைப்பயனால் தனக்குப் பரமபதவாழ்வளிக்கும்படி வேண்ட என்றவாறு. பருகென - உண் என்று வேண்ட. பருகாது - உண்ணாமல். கோட்டும்படி - எழுதும்படி. அதனை - வீட்டுலகவாழ்வை. அவனில் - அவனால்= நம்பாடுவானால். அவனுக்கு - பிரமராக்கதனுக்கு. பரமபதத்தை நம்பாடுவானால் பிரமராக்கதனுக்குக் கொடுத்துப் புகழ்கொண்ட திருமாலும் குழகனும் ஆகிய அழகியநம்பிபுகழினாற் செஞ்சொற் கொழிக்கும் இக் கவி தழைய நாதமுனியைத் துதிப்பென் என முடிக்க. குழகன்-இளமைப்பருவமுடையான் (3)

பொய்கையார்

4 வெருக்குண் டழுக்குண்ட நெஞ்சத்து வஞ்சத்து
விகடநிசி சரர்மகுடமாம்
வேதண்ட மிடிபடக் கோதண்டம் வாங்குகரு
மேகத்தி னாகத்தினால்
நெருக்குண் டொதுக்குண்டு கோவலூ ரிடைகழியில்
நின்றமூ வரிலொருவராம்
நிபுணபண் டிதமூர்த்தி பொய்கையார் தாட்கமலம்
[1]நித்தலும் வழுத்துவெனியான்
திரைக்குண் டகட்டுப் பரப்பாழி குதிகொண்டு
சேணகல் விசும்புகௌவித்
திகிரிப் பிறங்கலு மிகப்பக் கதித்துவான்
திசையடங் கலும்விழுங்கிப்
பெருக்குண்ட வெள்ளத்தில் ஆலிலைக் கண்டுயில்
பிரானைக் குறுங்கேசனைப்
பிள்ளைக் கவிப்பாடல் வெள்ளைக் கவிக்குள்ள
பேதைதமை பொறுத்தருளவே. (௪)

---

[1] நித்தமும். [பி-ம்.]

குறிப்புரை:—வெருக்குண்டு அழுக்குண்ட வஞ்சத்துநெஞ்சத்து விகட நிசிசரர் - அச்சங்கொண்டு குற்றமடைந்த வஞ்சகமனத்தோடு வேறுபட்ட அரக்கருடைய. வெரு - கு - உண்டு; கு சாரியை. விகடம் - வேறுபாடு. நிசிசரர் - (இராவணாதி) அரக்கர். மகுடமாம் வேதண்டம் - கிரீடமாகியமலை. கோதண்டம் வாங்கு கருமேகத்தின் ஆகத்தினுல் - வில்லைவளைத்த கரியமேகமாகிய திருமாவின் மார்பினுல். மூவர் - பொய்கையாழ்வார் பூதத்தாழ்வார் பேயாழ்வார் என்போர். ஒருவர் - பொய்கையாழ்வார். நிபுண பண்டித மூர்த்தி - சிறந்த அறிவேவடிவாகவுடையவராகிய. தாட்கமலம் - திருவடித் தாமரைகளை. நித்தலும் - தினந்தோறும். வழுத்துவென் - துதிப்பேன். திரைக் குண்டகட்டுப் பரப்பாழி - அலைகளோடுகூடிய ஆழமான நடுப்பக்கத்தையுடைய பரவிய கடலானது. திரை - அலை. குண்டு - ஆழம். அகடு - நடுப்பக்கம். பரப்பு - விசாலம். ஆழி - கடல். குதிகொண்டு - கிளர்ந்தெழுந்து. சேண் அகல் விசும்பு கௌவி - நெடுந்தூரமான பரந்த ஆகாயத்தைத் தன்னகப்படுத்தி. கிரிப் பிறங்கலும் இகப்பக் கதித்து - சக்கரவாள கிரியையும் கடக்க மிகுந்து. வான் - பெரிய. திசையடங்கலும் - திக்குகளையெல்லாம். ஆழி குதிகொண்டு, கௌவி, கதித்து, விழுங்கிப் பெருக்குண்ட வெள்ளம் என்க. அது பிரளயவெள்ளம். குறுங்கேசன் - குறுங்குடித் திருமால். குறுங்கேசனைப்பாடும் பிள்ளைக்கவியாகிய வெள்ளைக்கவியின் கண் உள்ள பேதைமை பொறுத்தருளப் பொய்கையார்தாட்கமலம் நித்தலும் யான் வழுத்துவென் என்று வினைமுடிவுகொள்க. (4)

பூதத்தார்

5 தருபூத நிலையைந்து பொறியைந்து சத்தாதி
தானைந்து கன்மேந்த்ரியத்
தலைமைந்து கரணங்கள் நான்கிவை யுயிர்க்குள்ள
தத்துவ முணர்ந்துபரிசித்
தொருபூத ரறியாத குருபூத வுபநிடத
வுண்மைஞா னத்தெரிசனத்
துயர்பூத ஆழ்வார் துணைச்சே வடிக்கமலம்
உச்சியிற் சேர்த்துவெனியான்
பொருபூத ரப்புகர் முகப்பிறை மருப்பைப்
பொடித்தொடித் தவணபூதப்
பொருளான மாயன் சுரும்பூத வாய்விண்ட
பூந்துள வலங்கல்மார்பன்

வருபூத லத்தினிய வண்ணமழ கியநம்பி
வடிவுமழ கியநம்பிபார்
வாழ்வித்த நம்பிமஞ் சனநம்பி யிருதாள்
வழுத்துமென் கவிதழையவே. (ரு)

குறிப்புரை:—நிலைதருபூதமைந்து என்க. பூதம் 5: மண், நீர், தீ, காற்று, ஆகாயங்கள். பொறி ஐந்து: மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. சத்தாதி ஐந்து: ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்பன. தான் அசை. கன்மேந்திரிய(த்தல)ம் ஐந்து: வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்பன. கரணங்கள் நான்கு:—பிரகிருதி, மஹான், அகங்காரம், மனம் என்பன. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பனவுமாம். பூதமைந்தும் பொறியைந்தும் புலன்களைந்தும் கன்மேந்திரியமைந்தும் அந்தக்கரணம் நான்கும் ஆகிய உயிர்க்குள்ள தத்துவங்களையுணர்ந்து என்க. ஒரு பூதர் அறியாத உபநிடதம், குருபூத உபநிடதம் எனக் கூட்டுக. ஒரு பூதர் பரிசித்து அறியாத - ஒருவராலும் எட்டி அறியப்படாத. பூதரும் என்பதனுள் உம்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது. குரு பூத உபநிடதம் மேன்மையான பழைய உபநிடதம். தெரிசனத்து - காட்சியால். துணை - இரண்டு. பொரு பூதரப் புகர்முகப் பிறைமருப்பைப் பொடித்தொடித்தவன் - தாக்குகின்ற மலைபோன்ற (குவலயாபீடமென்னும்) யானையின் புள்ளிகளோடு கூடிய முகத்துப் பிறைபோல் வளைந்த கொம்பினை ஒடித்துப் பொடிபடுத்தவன். பொரு - தாக்குகின்ற. பூதரம் - மலை. புகர் - புள்ளி. பிறை - நிரம்பாத மதி, மருப்பு - கொம்பு. சுரும்பு - வண்டு. துளவலங்கல் - துழாய்மாலை. பொருபூதரப் புகர்முகப் பிறைமருப்பைப் பொடித்தொடித்தவன், அபூதப்பொருளான மாயன், துளவலங்கல் மார்பன், பூதலத்தினிய நம்பி, வண்ணமழகியநம்பி, வடிவும் அழகியநம்பி, பார்வாழ்வித்தநம்பி, மஞ்சனநம்பி என்பன குறுங்குடித்திருமாலைச் சுட்டிநின்றன. நம்பியிருதாள் வழுத்தும் என்கவி தழைய, உயர் பூதஆழ்வார் துணைச்சேவடிக்கமலம் யான் உச்சியிற்சேர்த்துவென் என முடிவுகொள்க. (5)

பேயார்

6 சுரும்பே யிணைக்கோங் கரும்பே தசும்பே
தொழும்பே ரெழில்கண்டுபார்
தொழும்பே செயத்துங்க வம்பே யுழும்பே
துறும்பேத துன்பேதரும்

கரும்பே பொறிக்குந் தடந்தொய்யி லிளமுலைக்
காமநுக ராதுஞானக்
கனியைநுக ருஞ்சுவை மணந்தபே யாழ்வார்
கழற்கால் வணங்குவெனியான்
இரும்பே யெனும்பே தைமைக்கருத் தைக்குழைத்
தென்னையா ளுடையகோமான்
எறிதிரைப் பரவைமீ தம்பே தொடுங்கார்
இடும்பே செயக்கருதிமேல்
வரும்பேய் முலைச்சுவடு வாய்மடுத் தவளுயிரை
வம்பே செகுத்தமாயன்
வாழ்வித்த நம்பிதன் பாதத்தின் மிசைசூட்டும்
வண்டமிழ் தழையவென்றே. (சு)

குறிப்புரை:—சுரும்பு - மலை. தசும்பு - குடம். சுரும்பும் கோங்கரும்பும் தசும்பும் மகளிர் தனத்துக்கு உவமமாகக் கவிகளாற் கூறப்படும் பொருள்கள். இணைக்கோங்கரும்பு என்பதனுள் இணையென்பதனைப் பிரித்துச் சுரும்பு தசும்பு என்பவற்றின் முன் இணைத்து இணைச்சுரும்பு, இணைத்தசும்பு எனவும் கொள்க. சுரும்பும் கோங்கரும்பும் தசும்பும் தோற்றுவணங்கும் (தனத்தின்) மிக்க அழகினைக் கண்டு உலகத்தார் அடிமைசெய்ய, (அவ்வாறு அடிமை செய்வார்க்கு) மன்மதனுடைய உயர்ந்த மலர்க்கணைகள் பிளக்கும் மயக்கம் விளைக்கும் பலவகைத் துன்பங்களையேதரும் இளமுலை, கரும்புபொறிக்கும் தடந்தொய்யில் முலை எனக் கூட்டுக. ஏகாரம் முன்னைய மூன்றும் எண்ணுப் பொருள. தொழும்பே துன்பே என்பவற்றுள் ஏகாரம் தேற்றப்பொருள் குறித்துநின்றது. அம்பே கரும்பே என்பவற்றுள் ஏகாரம் அசை. காமம் நுகராது - காமவின்பம் துய்க்காமல். இளமுலைக்காமம் நுகராது சுவை மணந்த ஞானக்கனியை நுகரும் பேயாழ்வார் என்க. பேதைமை - அறியாமை. கருத்தை-மனத்தினை. திரை-அலை. பரவை-கடல். கார்-மேகம் போன்றவன். பரவைமீது அம்புதொடுத்தது இராமாவதாரகாலத்தில். இடும்பு - சேட்டை. பேய் - பூதனை. மேல்வரும் பேய்முலைச்சுவடு வாய் மடுத்தது கிருஷ்ணவதாரத்தில். வாய்மடுத்து - உண்டு. அவள் என்றது பூதனையை. செகுத்த - அழித்த. என்னை ஆளுடைய கோமான், பரவைமீது அம்புதொடும் கார், பேய்முலைச்சுவடு வாய்மடுத்து அவளுயிரை வம்பே செகுத்த மாயன், வாழ்வித்த நம்பி என்பன குறுங்குடித்திருமாலைச் சுட்டி நின்றன. நம்பி பாதத்தின்மிசை சூட்டும் வண்டமிழ்தழையவென்று காம நுகராது, சுவைமணந்த ஞானக்கனியை நுகரும் பேயாழ்வார் கழற்கால் யான் வணங்குவென் என முற்றுவிக்க. (6)

## பெரியாழ்வார்

7 பழியறுத் துப்பவ மறுத்துப் பிணிப்புண்ட
பாசத் துவக்கறுத்துப்
பாண்டியன் மதித்திடத் தமிழ்செய்து சங்கநூற்
பழையமூ தூர்மதுரையிற்
கிழியறுத் துச்சமய மதமறுத் தமிழ்மதக்
கிரிமிசைத் தாளவட்டக்
கிளர்மணி யிரட்டுறப் பல்லாண் டிசைத்துலகு
கெடுநாகு குடிபுகப்போம்
வழியறுத் துக்கருட னிருபுறத் துச்சியின்
வரக்கண்டு கண்களித்து
மாமாலை மகிழ்தரப் பாமாலை சூட்டிய
மறைக்கொழுந் தைப்பரவுவென்
விழியறுப் பினுமன்பர் நாவறுப் பினுமீள
விரைவிற் கொடுத்தருள்செயும்
மேதகு குறுங்கைமுகி லைப்பாட வாணிநா
வீற்றிருந் தருள்புரியவே. (எ)

குறிப்புரை:—பவம் - பிறப்பு. பிணிப்புண்ட - தொடுத்து வருவதான. பாசத்துவக்கு - வினைக்கட்டு. தமிழ்செய்து - தமிழ்ப்பாசுரங்களை அருளிச் செய்து. சங்கநூற் பழைய மூதூர் மதுரை - சங்கநூல்களிற் பாராட்டிப் பேசப்படுகிற பழைய பெரிய நகரமாகிய மதுரையில். கிழி - (பரதத்துவ நிர்ணயஞ்செய்தார் கொள்கெனத் தூக்கிய) பொன்முடிப்பு. மதம் உமிழ் கிரிமிசை என மாற்றிக்கூட்டி, மதத்தைச் சிந்துகின்ற மலைபோன்ற யானைமேல் எனப் பொருளுரைக்க. தாளவட்டக் கிளர் மணி இரட்டுற - அசைதலையுடைய வட்டமான விளங்குகின்ற மணியானது (தாளமாக) ஒலிக்க. பல்லாண்டு இசைத்து - திருப்பல்லாண்டு என்னும் பதிகத்தை இசையொடு அருளிச்செய்து. கருடனிருபுறத்துச்சியின் - கருடனுடைய பெரிய முதுகின் மேலிடத்தில்=பிடரில். மாமால் கருடனிருபுறத்து உச்சியின் வரக்கண்டு கண்களித்து மாமாலை மகிழ்தரப் பாமாலை சூட்டிய மறைக்கொழுந்து என்க. மாமாலை திருமகளோடு கூடிய இறைவனை. பாமாலைசூட்டிய மறைக்கொழுந்து என்றது பெரியாழ்வாரை. பரவுவென் - துதிப்பேன். விழி - கண். அன்பர்கள் தாந்தாம் விரும்பியதையடையும்

பொருட்டுத் தங்கள் தங்கள் கண்களையிடந்தும் நாவினை அறுத்தும் காணிக்கையாக இட்டாலும் அதனால் அவர்கள் அவ்வுறுப்பறைகளாகாதவாறு அவற்றை மீட்டும் விரைந்துகொடுத்ததன்மேலும் அவர்கள் விரும்பிய பேற்றினையும் நல்கும் குறுங்கைமுகில் என்க. குறுங்கைமுகில் - திருக்குறுங்குடியில் எழுந்தருளியுள்ள மேகம்போல்பவரான திருமால். வாணி - கலைமகள். மதுரையிற் பாண்டியன் மதித்திடத் தமிழ்செய்து, பழியறுத்து, பவமறுத்து, தவக்கறுத்து, மதமறுத்து, கிழியறுத்து, (மாமால் கருடன் புறத்துச்சியின்வரக்)கண்டு, களித்து, பல்லாண்டிசைத்து, வழியறுத்து, பாமாலை சூட்டிய மறைக்கொழுந்து என்க. வாணி நாவீற்றிருந்தருள்புரிய மறைக்கொழுந்தைப் பரவுவென் என முடிக்க. (7)

நம்மாழ்வார்

8 பாவப் பயன்பெய்து நல்குர வடைந்தவர்கள்
படுபழிக் கஞ்சாதுபோய்ப்
பழநிதிச் செல்வர்தம் பாலிரந் துண்ணுமப்
பான்மையிற் புணரமறைதேர்ந்
தாவிக் குறுந்துணை யளித்ததிரு வாசிரியம்
அந்தாதி திருவிருத்தம்
ஆயிரத் தமிழ்செய்த பாயிரப் புலவனை
அடித்துணை வழுத்துவெனியான்
கூவிக் கருங்குயி லனங்கனை யழைக்குங்
குறுங்கா புரித்தலைவனைக்
கோசலைக் கினியகைக் கோமளக் குழவியைக்
குழகனழ கியநம்பியைச்
சேவிக்க வாழ்விக்கு நம்பியைக் காப்புமுதல்
சிறுதே ருருட்டல்வரையுந்
தெள்ளித் தமிழ்க்கூறு பிள்ளைத் தமிழ்ப்பாடல்
செஞ்சொலாற் றருகவென்றே. (அ)

குறிப்புரை:—நல்குரவு-வறுமை. இரந்துண்ணும் அப்பான்மையிற்புணர-பிச்சையேற்றுண்ணும் அத்தன்மையொடுபொருந்த. மறைதேர்ந்து - வேதப்பொருளை (வரையறுத்து) உணர்ந்து. ஆவிக்கு உறும் துணையளித்த - உயிர்கட்கு ஏற்ற துணைவனைக் காட்டித்தந்த. ஆயிரத்தமிழ் - திருவாய்மொழி.

செய்த - அருளிச்செய்த. பாயிரப்புலவனை பொருட்செறிவுள்ள புலமையுடையானை=சடகோபனை. நம்பியைக்கூறு பிள்ளைத்தமிழ்ப்பாடல் செஞ்சொலால் தருக என்று திருவாசிரியம், அந்தாதி, திருவிருத்தம், ஆயிரத் தமிழ் செய்த பாயிரப்புலவனை யான் அடித்துணை வழுத்துவென் என முடிக்க. கருங்குயில் அநங்கனைக் கூவியழைக்கும் குறுங்காபுரி யென்க. கோசலைக் கினிய கைக்குழவி கோமளக்குழவி. கோமளம்-அழகு. காப்புமுதல் சிறுதேருருட்டல்வரை என்றது பிள்ளைத்தமிழுறுப்புக்களை. தாம் இயற்றிய தீவினைப் பயனால் வறுமையுற்றோர் உலகங்கூறும் வசைக்கு அஞ்சாது தொன்றுதொட்டு வந்த செல்வர்பாற்சென்று தமக்குவேண்டிய துப்புரவுகளை இரந்துண்ணும் அத்தன்மையொடுபொருந்தக் கல்லாதும் கேளாதும் நின்று அதனாற் செய்யுளியற்றுமாற்றலிழந்த யானும் கருவிலேயமைந்த கவித்வமுடைய நம்மாழ்வாரடியிணைகளை வணங்கி வாழ்த்தி யிரந்து அவரருளால் எய்திய கவித்வத்தால் இப்பிள்ளைத்தமிழை முற்றுவிப்பேன் என்றவாறு. (8)

திருமங்கையாழ்வார்

9 தெரிவரிய பொருள்நின்ற தினதன்றி யெனதென்று
சிலுகிட்ட சட்சமய நூற்
றெய்வப் பிணக்கங்கள் அறுகூற் றிருக்கைத்
தெளித்தவெழு கூற்றிருக்கை
பெரியதிரு மடல்சிறிய மடல்குறுந் தாண்டகம்
பெய்பொருள் நெடுந்தாண்டகம்
பேசித் திருப்பதி வளம்பாடு நாற்கவிப்
பெருமானை மங்கைவேந்தைக்
கரியமுகி லைப்பொருள் கவர்ந்தகா னிடையன்று
கனிவாயி லெச்சில்வைத்துக்
கையிலச் சினையைப் பிடித்துக் கழற்றுபர
காலனை வழுத்துவெனடிப்
பரியதலை நெடியமரு தொடியவரு கடியதாட்
பச்சைப் பசுங்குழவியைப்
புழங்கா வியங்கேர் குறுங்கேச நம்பியைப்
பன்னுமென் கவிதழையவே. (௯)

குறிப்புரை:—சிலுகிட்ட-சண்டையிட்ட. சட்சமயம்-அறுவகைச்சமயம். பிணக்கங்கள் - மாறுபாடுகள். அறு - நீங்கும்படியான. கூற்று - பேச்சான. இருக்கைத் தெளித்த - வேதப்பொருள்களை விளக்கிய. தெய்வப்பிணக்கங்களறுகூற்று (ஆன) எழுகூற்றிருக்கை, இருக்கைத்தெளித்த எழுகூற்றிருக்கை எனக் கூட்டுக. எழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல், திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், பெரியதிருமொழி யென்பவை திருமங்கையாழ்வார் அருளிச்செய்த திவ்யப்ரபந்தங்கள். திருப்பதிவளம் என்றது பெரியதிருமொழியினை. நாற்கவிப்பெருமான், மங்கைவேந்தன், பிரகாலன் என்பன திருமங்கையாழ்வார் திருநாமங்கள். கரியமுகிலை - கரிய மேகத்தையொத்த வயலாலிமணவாளரான திருமாலை. பொருள் கவர்ந்த கானிடை - வழிப்பறிசெய்து பொருளைப்பறித்த காட்டில். அன்று - அக்காலத்து. கனிவாயில் எச்சில்வைத்துக் கையிலச்சினையைக் கழற்று பரகாலன் - (வயலாலிமணவாளனை வழிபறித்தகாலத்துக்) கொவ்வைக்கனி போன்ற வாயின்கண் உள்ள(பல்லாற்கடித்து)எச்சில்படச்செய்து, வயலாலி மணவாளன் கையின்கண் அணிந்த முத்திரைமோதிரத்தைக் கழற்றிய திருமங்கையாழ்வார். கையிலச்சினை - கைவிரலில் அணிந்த முத்திரைமோதிரம். பரிய -பெரிய. பரிய அடித்தலை நெடிய மருது என்க. தாள் - திருவடி. மருதொடியவரு கடியதாட் பச்சைப் பசுங்குழவி - கண்ணன். பழங்காவியம் என்றது திவ்யப்ரபந்தங்களை. குழவியை, நம்பியை, பன்னும் என்கவிதழையப் பரகாலனை வழுத்துவென் என முடிவுகொள்க. (9)

திருமழிசையாழ்வார்

10 தருச்சந் தனத்துக்கு நிம்பநிக ரோமால்
தனக்குவமை யுளரோவெனச்
சட்சமய நூல்விதியை நாமுறத் திட்டுத்
தவப்பதர் படக்கொழித்துத்
திருச்சந்த வோசையின் விருத்த நூற் றிருபதும்
செய்தராப் பாய்சுருட்டிச்
செங்கண்மால் பின்செல்ல முன்சென்ற பாவலன்
சேவடி வணங்குவெனியான்
பரிச்சந் திரன்றேரும் ஒருதிகிரி சுழல்தராப்
பகலவன் நடாத்துதேரும்
பன்மலர்க் கொம்பரின் உயர்ச்சிகண் டேறுது
பாங்கரின் ஒதுங்கியேகும்

மருச்சந்த வார்பொழில் தென்குறுங் கைக்கரசை
வாழ்த்துமென் கவிமாலைநேர்
வாடாது செஞ்சொற் கயங்காது புவியெங்கு
மாசற மணப்பதற்கே. (க0)

குறிப்புரை:—தருச்சந்தனத்துக்கு-தருவாகிய சந்தனத்துக்கு=சந்தனத் தருவுக்கு. தரு-மரம். நிம்பம்-வேம்பு. சந்தனத்தருவுக்கு நிம்பம் நிகரோ? என்க. அன்றி, தருவுக்கு நிம்பம் நிகரோ? சந்தனத்துக்கு நிம்பம் நிகரோ? எனினும் அமையும். இங்கே தரு - கற்பகம். எதுகை நோக்கிச் சகரவொற் றிரட்டித்தது. தருச்சந்தனத்துக்கு நிம்பம் நிகரோ? மால்தனக்கு உவமை யுளரோ? என்பது எடுத்துக்காட்டுவமையணி பயின்றது. திருமாலுக்குச் சந்தனவிருக்ஷமும், மற்றைத்தேவருக்கு வேம்பும் உவமை. சந்தனமரத் துக்கு வேம்பு நிகராகாது அதுபோலத் திருமாலுக்கு மற்றைத்தேவர் ஒப் பாகார் என்றபடி. சட்சமயநூல்விதியை - அறுவகைச்சமயநூல்விதிகளை. நாமுறத்திட்டு - நாவாகிய முறத்திலே பெய்து. பதர்படத்தவக்கொழித்து - பதரைக்கொழிப்பதுபோல மிகவும் கொழித்து நீக்கி. சமயநூல்விதியைக் கொழித்து என்க. ஓசையின் திருச்சந்தவிருத்தம் எனக் கூட்டுக. ஓசையின்- பெருமையினையுடைய. திருச்சந்தவிருத்தம் என்பது திருமழிசையாழ்வாரால் அருளிச்செய்யப்பட்டதொரு பிரபந்தம். அது நூற்றிருபது பாசுரங்களால் அமைந்தது. அராப்பாய் - பாம்பணை. செங்கண்மால் அராப்பாய் சுருட் டிப் பின்செல்ல முன்சென்றபாவலன் என்றது திருமழிசையாழ்வாரை. சந்திரன்தேரும் பகலவன்தேரும் கொம்பரின் உயர்ச்சிகண்டு எறுது பாங்க ரின் ஒதுங்கியேகும் பொழில் என்க. சந்திரனும் சூரியனும் வழிவிலகிச்செல லும்படி உயர்ந்தசோலை என்றவாறு. பரித்தேர், சந்திரன் தேர் என்க. பரி- குதிரை. தேர் என்றதற்கேற்பப் பரி கூறினர். பரி விரைவுமாம். பகலவன் ஒருதிகிரி சுழல்தர நடாத்துதேரும் என்க. பகலவன் - சூரியன். ஒருதிகிரி - ஒற்றைச்சக்கரம். கொம்பர் - கொம்பு=கிளை. பாங்கரின் - பக்கத்தில். மருச் சந்த வார் பொழில் — மணமும் அழகும் பொருந்திய நீண்ட சோலை. கயங்காது - கசங்காமல். குறுங்கைக்கரசை வாழ்த்தும் என் கவிமாலை வாடாது கசங்காது புவியெங்கும் மணக்கும்பொருட்டு, யான் செங்கண்மால் பின்செல்ல முன்சென்ற பாவலன் சேவடி வணங்குவென் என்று முடிக்க. ()

தொண்டரடிப்பொடியார்

11 தேசக் குடகா விரிநீர் படியுஞ்
செல்வ ரரங்கற்குச்
செஞ்சொற் றமிழ்மாலையையடி சூட்டிச்
செவ்வி மணந்ததுழாய்

வாசத் திருமா லையைமுடி சூட்டி
வணங்குந் தவராசன்
மண்டங் குடிவாழ் தொண்ட ரடிப்பொடி
வரமுனி யைத்தொழுவென்
பாசத் தளைவிண் டடிமைக் குடிமைப்
பதின்மர் மொழிந்ததமிழ்ப்
பாடற் சுவையுண் டசெவிக் கிதுவும்
பருகத் தகுமோபின்
பேசத் தகுமோ நம்பி குறுங்கைப்
பெருமா னருளாலே
பிள்ளைக் கவிபொன் வள்ளத் தமுதம்
பெரியோர் கொளுமாறே. (கக)

குறிப்புரை:—தேச-ஒளியையுடைய. குடம்-மேற்கு. குடகாவிரி-மேற்கே நின்று பெருக்கெடுத்துவரும் காவிரி. படியும் - முழுகுகின்ற. மண்டங்குடி தொண்டரடிப்பொடியாழ்வார் அவதரித்த ஊர். வரமுனி - முனிசிரேட்டன். பாசத் தளை விண்டு-பற்றுகிய விலங்கு முறிந்து. பதின்மர் என்றது ஆழ்வார் களை. ஆழ்வார்கள் பன்னிருவராகவும் இங்கே பதின்மர் என்றது ஆண்டாளை அவர் தந்தையாரான பெரியாழ்வாரோடும் மதுரகவிகளை அவருடைய ஆசிரிய ரான சடகோபரொடும் சேர்த்து ஒருவராக எண்ணும் முறைபற்றி. இதுவும்- இப்பிள்ளைத்தமிழும். உம்மை இழிவுசிறப்பு. அருளால் - அருளுடன். பிள்ளைக்கவி - (இப்)பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தை. பதின்மர் மொழிந்த தமிழ்ப்பாடற் சுவையுண்ட பெரியோர் செவிக்கு இதுவும் பருகத்தகுமோ? பின் பேசத்தகுமோ? (பருகத்தக்கதன்று அடுத்துப் பேசத்தக்கதுமன்று) எனினும், குறுங்கைப்பெருமானருளால் இப்பிள்ளைக்கவியைப் பொன்வள்ளத் தமுதமாகப் பெரியோர் கொள்ளுமாறு தொண்டரடிப்பொடி (யாகிய)வர முனியைத் தொழுவென் என வினைமுடிவுகொள்க, குறுங்கைப்பெருமானருள் அமுதமாகவும், அவ்வருளைப் பரக்கப்பேசும் இப்பிள்ளைத்தமிழ் அவ்வரு ளாகிய அமுதத்தைப் பெய்துவைத்த பொற்கிண்ணமாகவும் கொள்ளக்கூறிய நயம் உவகை விளைப்பது. இச்செய்யுள் அவையடக்கமும் கூறியதாகும். (11)

குலசேகரர்

12 அல்லிவாய் நெகிழத் ததும்பும் பசுந்தேறல்
அரவிந்தை கேள்வனடியார்
அல்லவை புரிந்தொழுகு மவால ரெனக்குடத்
தாவிற்கை நீட்டியருளும்

கொல்லிகா வலனைப் பிறங்குமான் பொருநையுங்
குடநாடு முரியதலைமைக்
குலசே கரக்குரி சிலைப்பொரு சிலைக்கோடிக்
கோவேந்த னைப்பரவுவென்
வல்லிகா விறுகப் பிணித்தழுத் துவதென்ன
வரியுடற் பிணர்வன்கரா
வல்லெயிறு கௌவிப் பிடித்தநாள் வெருவந்து
மதவேழ மூலமென்னச்
சொல்லிவாய் கூடாமுன் உவணன் பிடர்த்தலைத்
தோன்றிய குறுங்கேசனைச்
சுடராழி மாலைப் புணர்த்தவென் புன்கவிச்
சொற்பொருட் பிழைதீரவே. (கஉ)

குறிப்புரை:—அல்லி-அகவிதழ். வாய்நெகிழ-விரிய. அல்லி வாய்நெகிழப் பசுந்தேறல் ததும்பும் என்பது அரவிந்தத்துக்கு அடை. தேறல் - தேன். ததும்பும் - வழிகின்ற. அரவிந்தை - அரவிந்தத்தில் வீற்றிருப்பவளான திருமகள். அரவிந்தம் - தாமரை. அரவிந்தை கேள்வன் அடியார் - திருமகள்நாயகனான திருமாலின் றொண்டர்கள். அல்லவை - தீயவை. 'அரவிந்தைகேள்வனடியார் அல்லவை புரிந்தொழுகுமவரலர்' என்றது தம்முடைய மணிமாலையைக் களவிற்கொண்டவர் திருமாலடியரேயென்றுகூறிய உழையரைநோக்கி அவரல்லர் என்று பாம்புக்குடத்திற்கையிட்டுக் குலசேகரர்கூறிய சத்தியவசனம். அரவுக்குடத்தில் என மாறிக்கூட்டுக. கொல்லி - சேரநாட்டிலுள்ளதொரு மலை. ஆன்பொருநை-அந்நாட்டகத்ததொரு யாறு. பிறங்கும் - விளங்குகின்ற. குடநாடு - சேரர்க்குரியநாடு. பொரு - தாக்குகின்ற. சிலைக்கொடி - விற்கொடி. கொல்லிகாவலன், சிலைக்கொடிக்கோவேந்தன் என்பன குலசேகராழ்வாரைச் சுட்டிநின்றன. வல்லி-விலங்கு வரி - கீற்று. பிணர் - கரடுமுரடானவடிவு. வன் கரா - வலிய முதலை. எயிறு - பல். மதவேழம் - மதயானை=கஜேந்திரன். உவணன் - கருடன். பிடர்த்தலை - பிடரியில். சுடர் - ஒளி. ஆழி - சக்கரம். புணர்த்த - இசைவுபடத்தொடுத்த. குறுங்கேசனை மாலைப் புணர்த்த என் புன்கவிச் சொற்பொருட்பிழைதீரக் கொல்லிகாவலனை, சிலைக்கொடிக்கோவேந்தனை, குலசேகரக்குரிசிலைப் பரவுவென் என வினைமுடிவுகொள்க. (12)

திருப்பாணாழ்வார்.

13 கருமணிக் கழகுசெய் வனபோற் பசுந்துழாய்க்
கடிகம ழலங்கன்மாலைக்
கண்டகண் பிறிதொன்று காணு தெனத்தனது
கண்மணி செகுத்துஞானத்
தருமணிக் கண்படைத் தமலனு திப்பிரான்
அமைத்துரைத் தருள்திருப்பா
ணாழ்வார் கழற்கமலம் வாழ்வாக நித்தலும்
அடிக்கடி வணங்குவெனியான்
வரிவளைக் குலமுத்தும் வான்கரும் புகுமுத்தும்
மணமலி படப்பைவேலி
மடற்கதலி யுகுமுத்து மலர்க்கமல வெண்முத்தும்
மாறுடி யினமயங்கச்
சொரிகதிர்ப் படலைவான் நிலவிருட் படலம்
சுருட்டியெறி தரவிசும்பைத்
தொடுமதிட் குடுமிக் குறுங்கைநம் பியையான்
துதித்தசொற் றமிழ்வாழவே. (கரு)

குறிப்புரை:—கடி - பரிமளம். அலங்கல் - மாலை. மால் - அரங்கத்து நம்பெருமாள்; 'மாலைக்கண்டகண் மற்றொன்றுகாணுது' என்றது திருப்பாணாழ்வார்கூற்று. 'அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணுவே' என்பது நோக்குக. கண்மணி செகுத்து - தன் கண்ணாற் பிறிதொன்றையும் காணுதுநீக்கி. ஞானத்தருமணிக்கண்படைத்து - அருமையான அழகிய ஞானக்கண்படைத்து. அத்து சாரியை. 'அமலனுதிப்பிரான்' திருப்பாணாழ்வார் அருளிச்செய்த பிரபந்தம். இது முதற்குறிப்பாற் பெற்ற பெயர். கழற்கமலம் - திருவடித்தாமரை. நித்தலும் - தினந்தோறும். வளைக் குல முத்தும் - சங்கின்ற சிறந்த முத்தும். வான் - சிறந்த. உகும் - சிந்துகின்ற. மலி - மிக்க. படப்பை - பொழில். கதலி - வாழை. மயங்க - கலக்க. வளைமுத்தும், கரும்புமுத்தும், கதலிமுத்தும், கமலமுத்தும் இனம் (கூட்டமாய்) மாறுடிக் கலத்தலால். கதிர்ப்படலை - கதிர்த்தொகுதி. இருட்படலம் - இருளாகிய திரையை. விசும்பைத் தொடும் மதிட்குடுமி - ஆகாயத்தைத்தொடும்படி உயர்ந்த மதிலின் சிகரங்களையுடைய. குறுங்கைநம்பியையான் துதித்த தமிழ் வாழ, வாழ்வாக, யான் திருப்பாணாழ்வார்கழற்கமலம் நித்தலும் அடிக்கடி வணங்குவென் என முடிக்க. (13)

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | ஞானமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... ... | 1 | 8 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |
| 17. | அகநானூறு மூலமும் உரையும் (முதல் 36 செய்யுள்) | 0 | 12 | 0 |

---

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | 4 | 0 |
| 2. | கனாநூல் (5) இனியதுநாற்பது (உரை) ... | 0 | 3 | 0 |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... | 0 | 8 | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | முத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சுகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம்... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (ஆங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | மதுரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | பழனிப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | கடம்பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| 60. | சங்கரநயினார்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| 61. | கலைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 62. | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| 63. | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64. | சிராமலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65. | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜநி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா ... | 0 | 12 | 0 |

**குறிப்பு:**-கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 46 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4-0-0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.